72

உ

சிவமயம்.

குருபாதம்.

பெரிய புராணத்திலுள்ள

# எறிபத்த நாயனர் புராணத்தின்

மெய்ப்பொருள் விளக்கம்.

(தத்துவ அர்த்தம்.)

★

குறடாச்சேரி உயர்சைவத்திரு

**வாலையானந்த சுவாமிகள்**

எனும்

**சச்சிதானந்த சுவாமிகள்**

இயற்றியது.

★

தஞ்சை வெற்றிவேல் அச்சகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

முதற் பதிப்பு

உரிமை ஆக்கியோருடையது.
கர ஆண்டு வைகாசித் திங்கள்.

★ [விலை 0—8—0

MADRAS
Q23:x1:9
N51
113901

# பொருளடக்கம்.


| | | | |
|---|---|---|---|
| 1. | அணிந்துரை | ... ... | i |
| 2. | சேக்கிழார் பெருமை | ... ... | ii |
| 3. | முன்னுரை | ... ... | iii |
| 4. | பெரிய புராணத்தின் பெருமை | ... | iv |
| I. | வாழ்த்து | ... ... | 1 |
| II. | எறிபத்த நாயனார் புராண வசனம் | ... | 2 |
| III. | புராண பாத்திரங்கள் குறிக்கும் தத்துவங்கள் | ... ... | 4 |
| IV. | தத்துவக் குறிப்பிற்கான மேற்கோள்கள், விளக்கங்கள் | ... ... | 5 |
| V. | புராண நிகழ்ச்சிகளின் தத்துவ அர்த்தங்கள் | ... ... | 18 |
| VI. | எறிபத்த நாயனார் புராண தத்துவார்த்தச் சுருக்கம் | ... ... | 32 |


## பிழை திருத்தம்.

| பக்கம் | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 33 | தீர்த்த(ல்) | தீர்த்த(ருள்) |
| 5 | 23 | ஊர்(த்)தனங் | ஊர்(ந்)தனங் |
| ,, | 29 | பெருந் | பெ(ய)ருந் |
| 7 | 5 | மத்தி(யா)ந்தன | மத்தி(ய)ந்தன |
| ,, | 8 | (பசுபதி) | (பதிபசு) |
| | 23 | எ(ன)க | எ(ன்)க |
| | 25 | நாமம் | நாம(மு)ம் |
| 10 | 1 | புராண(ம) | புராண(ம்) |
| 17 | 5 | றீரா'' | றீரா |
| 21 | 8 | கையா(ற) | கையா(ற்) |
| ,, | 11 | ர(ற)வே | ர(றி)வே |
| ,, | 29 | தா(ள்) | தா(ள) |
| 23 | 10 | ஞானசிரிய(ர) | ஞானசிரிய(ர்) |
| 28 | 18 | (தி)லகரி | (பி)லகரி |
| 32 | 28 | கருவிக(ளை) | கருவிக(ளின்) |
| ,, | ,, | நீ(க்)கிய. | நீ(ங்)கிய |
| 33 | ,, | சா(ர)பு | சா(ர்)பு |

கீழ்க்கண்டவைகளைக் குறிப்பிட்ட இடங்களில் சேர்த்துக்கொள்க:-

| பக்கம். | வரி. | இடம். | சேர்க்கை. |
|---|---|---|---|
| 1 | 12 | முடிவில் | பாயிரம் |
| ,, | 14 | ,, | திருத்தொண்டத்தொகை |
| ,, | 28 | ,, | 11 |
| ,, | 33 | ,, | பாயிரம் 4 |
| 7 | 8 | ,, | குருபதேசம் 4 |
| 9 | | பக்கமுடிவில் | மலர்க்கிடை=புட்பக்குடலை. |

உ

சிவமயம்.

# எறிபத்த நாயனர் புராணத்தின் மெய்ப் பொருள் விளக்கம்.

OFFICE OF THE REGISTRAR
... JUL 1951

## அணிந்துரை.

புராணம் எனும் பெயரைக் கேட்குமுன் அது கொளுத் தப்படவேண்டுமென்பதே காட்சியளவைக்கரரர் கண்ட முடி பாகும். கடவுள் நம்பிக்கையுடையவர்களுள்ளும் அதனைப் புனை கதை எனப் புறக்கணிப்போர் பலராவர். இவர்களுக் கெல்லாம் உலகம் ஒருவாறு கடமைப்பட்டுள்ளது; ஏனெனில் இந்நூல் இவர்களது உறுத்தலால் எழுந்ததேயாகும்.

கவின் கலைவாணர் புராணங்களிலுள்ள கற்பனைத்திறன், கருத்தமைதி முதலிய கலைப் பண்புகளில் கனிந்து களிப்புறு கின்றனர். வரலாற்ருளர் "இல்லாது பிறவாது (அள்ளாது குறையாது)" எனக்கொண்டு இவைகளிலுள்ள அடிப்படை உண்மைகளை ஆய்ந்து ஒப்ப முற்படுகின்றனர். பொது மக்க ளிற் பெரும்பாலோர் இவைகளை நம்பி, தங்கள் வாழ்க்கைகளை இவற்றிலுள்ள உண்மைகளுக் கேற்ப அமைத்துக்கொள்ள முயலுவதுடன் இவைபற்றி எழும் விழாக்கள், நோன்புகள், வழிபாடுகள், உற்சவங்களில் பங்கு எடுத்துக்கொண்டு தமது வாழ்க்கையைச் சுவையுடையதாக்கிக் கொள்ளுகின்றனர். எனவே பகுத்தறிவு சிலரை வெறுக்கச் செய்யினும் தொகுத் தறிவும் நம்பிக்கையும் பலரைப் புராணங்களில் ஈடுபடச் செய்துவருவது கண்கூடு.

புராணங்களுள் "**பெரிய புராணம்**" எனும் அரிய நூல் உண்மையாய் நிகழ்ந்த வரலாற்றுச்சார்புடைய செயல்களையே கூறுகிறதென்பது ஆராய்ச்சியாளர் துணிபாகும். அதில் கூறப்படுகிறவர்களெல்லாம் இன்ன காலத்தில் இவ்விடத்தில் விளங்கியவரென்று அறுதியிட்டுக் கூறமுடியும். எனினும் அதிலுள்ள சில செயற்கருஞ் செயல்களும் அவற்றை ஆற் றிய அரிய அன்பர்களும் உள்ளுறை உவமமாக என்றுமுள்ள சில அடிப்படை பொருள்களையும் (தத்துவங்களையும்) அவற் றின் இயற்கை செயற்கைகளையும் விளக்குவதைக் கூர்ந்து நோக்கின் தெரிந்துகொள்ளலாம். இவ்வாறு எறிபத்த நாய

ஞர் புராணம் விளக்குகின்ற செம்பொருள்களையும் அவற்றின் பண்புகளையும் இச்சிறு நூலில் காணலாம். இவற்றைச் சிறிதும் ஒப்பாதவர்களும் இந்நூலிற் காட்டப்பட்டுள்ள ஒற்றுமை நயங்களையும் மேற்கோட் சிறப்புக்களையும் கண்டு களிக்கக்கூடுமென்பதில் ஐயமில்லை.

இதனை எழுதிய நூலாசிரியர் இத்தகைய நூல்கள் இன்னும் பல தயாரித்திருப்பதால் இதனை ஆதரிப்பதால் அவைகளும் வெளிவருவதை விரைவிற் காணலாம். இதனை ஆக்கித்தந்த அடிகளாருக்கும் வெளியிட்டுதவ முன்வந்துள்ள கும்பகோணம் சிவனடியார் திருக்கூட்டத்தலைவர், பெருநிலக் கிழவர், அருநிதிச்செல்வர், சைவத்திரு, **குமரசாமிச் செட்டியார்** அவர்களுக்கும், இதனை அழகுற அச்சிட்டுதவிய **வெற்றிவேல் பதிப்பகத்தாருக்கும்** சைவ உலகம் பெரிதுங் கடப்பாடுடையதாகும். அன்னவர் நீடூழி வாழ்ந்து இத்தகைய அரும்பணி இன்னும்பல ஆற்ற முன்வருமாறு இறைவனை ஏத்தும் அன்பன்.

தஞ்சாவூர்,
15—5—51.

**சாமி. வேலாயுதம் பிள்ளை,** பி. ஏ; எல். டி;
ஓய்வுற்ற தலைமையாசிரியர்,
யர்நிலைப்பள்ளி, திருவாரூர் முதலியன
ஆசிரியர், 'மொழியரசி' முதலியன.

---

113901

## சேக்கிழார் பெருமை.

சொல்லும் பொருளு நனிசிறப்பச் சுருங்கச் சொல்லன் முதலாய
தோட்டி [illegible] வமங்கலமாஞ் சொற்கள் புணரா தறக்களைந்து
வெல்லுந் தகைய முரண்காட்டி விலக்கு விலக விதிதழுவி
விரும்பு மூல விலக்கியமே வேறு காதென் றுலகேத்த
வல்லும் பகலு மம்பலவ ரருடற் காய வரும்பணிசெய்
தருள்பெற் றுய்ந்த வடியார்த மருமை பெருமை பாராட்டிக்
கல்லுங் கரையக் கவிபாடுங் கனிவாய் முத்தந் தருகவே
கனகக் குன்றை யனகசெழுங் கனிவாய் முத்தந் தருகவே.

—சேக்கிழார் பிள்ளைத்தமிழ்-முத்தப் பருவம்-3.

N51



# முன்னுரை.

ஸ்ரீ அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபமாகிய பரசிவ பரம்பொருள் ஆன்மாக்களைப் பாசப்பிணிப்பினின்றும் நீக்கியருளத் திருவுளங்கொண்டு பஞ்ச கிருத்தியங்களைச் செய்யும்பொருட்டு தனது சொரூப நிலையினின்று பதியெனும் பெயர் தாங்கி தடத்த நிலையை எய்தியபோது தனக்குரிய சித்து சட சக்திகளாகிய பிரேரக பரிக்கிரக சத்திகளைத் தொடர்புறுத்தினர். அப்போது பிரதம சிருட்டி தொடங்கிற்று. அதில் ஆன்மகோடிகள் அறிந்து ஒழுகி ஆணவாதி பாசங்களை நீக்கிக்கொள்ளுவதற்கு ஏதுவான நூல்களாகிய வேத சிவாகமங்கள் வெளிப்பட்டன. அவற்றுள் வேதம் பலராலும் பொதுவாக அறிந்து அனுட்டிக்கத்தக்கதனலே பொது நூல் எனவும், ஆகமம் சத்திநிபாதம் எய்திச் சிறப்புற்ற ஆன்மாக்கள் அறிந்து அநுட்டிக்கத்தக்கதனலே சிறப்பு நூலெனவும் பெயர்பெறும். இவ்விருவகை நூல்களையும் ஐயந்திரிபற ஆய்ந்துணரும் ஆற்றலில்லாத மக்களுக்கு அவற்றிலுள்ள பொருள்களை உய்த்து உணர்வதற்கு ஏதுவான சரித்திரங்களும் வெளிப்பட்டன; அவைகளே புராணங்கள். அப்புராணங்கள் முதல் நூல்களின் கருத்துக்களை அறிவுறுத்துவதற்கு இருப்பன என்பதை உணராது வெறுங் கதைகளெனக் கருதிப் பலரும் பலவிடங்களிலும் பழித்துப் புறக்கணிக்கின்றனர். இதனை நீக்கக் கருதி திருத்தொண்டர் புராணத்தில் ஒரு சரித்திரத்தையும் கந்த புராணத்தில் வள்ளியம்மை திருமணம் எனும் பகுதியையும் ஆராய்ச்சிக் கருவியாக எடுத்துக்கொண்டு சாத்திரத்திற்கும் புராணத்திற்கும் உள்ள ஒற்றுமை நயங்களை ஆதாரத்தோடு எடுத்துக் காட்டி விளக்கியுளேன்.

இவற்றுள் அன்பர்கள் உதவியால் முந்தியது வெளியாகின்றது. பிந்தியதையும் வெளியிட அன்பர்கள் முன் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சச்சிதானந்த சுவாமிகள்,**

சித்தாந்த நிலையம், குறடாச்சேரி.

உ

சிவமயம்.

# பெரிய புராணத்தின் பெருமை.

வள்ளுவர்நூ லன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
தெள்ளு பரிமேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகைச்சித்தி யோராறுந்
தண்டமிழின் மேலாந் தரம்.

| | |
|---|---|
| பலகலைகளிலும் சாரமாயுள்ளது | வேதம் |
| அவ்வேதங்களின் சாரமாயுள்ளது | ஆகமம் |
| அவ்வாகமங்களின் சாரமாயுள்ளது | சித்தாந்தம் |
| அச்சித்தாந்தத்தின் சாரமாயுள்ளது | பெரிய புராணம் |
| உலக நிலையைக் கூறுவது | வேதம் |
| உயிர் நிலையைக் கூறுவது | ஆகமம் |
| சிவநிலையைக் கூறுவது | சித்தாந்தம் |
| சிவஞானத்தில் விளையும் அன்பினிலையைக் கூறுவது | பெரியபுராணம் |
| சிவன் வேதத்துக்கு | எட்டாதவனுயுள்ளவன் |
| ,, ஆகமத்துக்கு | அறியவுள்ளவன் |
| ,, சித்தாந்தத்துக்கு | அனுபவமாயுள்ளவன் |
| ,, பெரியபுராணத்துக்கு | அத்வைதமாயுள்ளவன் |
| வேத மார்க்கத்தால் வருவது | போகம் |
| ஆகம மார்க்கத்தால் வருவது | யோகம் |
| சித்தாந்தத்தால் வருவது | ஞானம் |
| பெரியபுராணத்தால் வருவது | அன்பு அல்லது முத்தி |

இங்ஙனம் கூறிவந்த முறையால் வேதாகம சித்தாந்தங்களின் கருத்துரையாயும் சாரமாயுமுள்ள இப்பெரிய புராண நூலைப் பக்தி நூலென்றும், பக்தி செய்தோரது சரித்திரமென்றும், ஞான நூல் அன்றென்றும், மெய்ஞ்ஞானச்செயலுடையோரைக் கூறும் நூல் அன்றென்றும் கூறி சிவாபராதிகளாகி மெய்ஞ்ஞானத்தையும் முத்திப்பயனையும் இழக்காதிருக்கும்படி கோரப்படுகிறது.

**கா. ஆலாலசுந்தரம் பிள்ளை,**

பெரிய புராணப் பேருரை ஆசிரியர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# எறிபத்த நாயனர் புராணத்தின் தத்துவார்த்தம்.

## I. வாழ்த்து.

திருச்சிற்றம்பலம்.

1. உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

—பெரிய புராணம்.

2. இலைமலிந்த வேல் நம்பி எறிபத்தர்க் கடியேன்.

—சுந்தரர் தேவாரம்.

3. ஊர்மதின் மூன்றட்ட வுத்தமர்க் கென்றே ருயர்தவத்தோன்
தார்மலர் கொய்யா வருபவன் தண்டின் மலர்பறித்த
ஊர்மலை மேற்கொளும் பாகர் உடல் துணியாக்குமவன்
ஏர்மலி மாமதில் சூழ்கரு வூரி லெறிபத்தனே.

—திருத்தொண்டர் திருவந்தாதி.

4. திருமருவு கருவூரா னிலையார் சாத்துஞ் சிவகாமி
யார்மலரைச் சிந்தயானை
யானெறியோ ரெறிபத்தர் பாகரோடு மறவெறிய
வென்னுயிரு மகற்றீரென்று
புரவலனுர் கொடுத்தபடை யன்பால்வாங்கிப் புரிந்தரிவான்
புகவெழுந்த புனிதவாக்காற்
கரியினுடன் விழுந்தாரு மெழுந்தார்தாமும் கணநாத
ரதுகாவல் கைக்கொண்டாரே.

—திருத்தொண்டர் புராண சாரம்.

5. மறிவைத்த கரனுக் கன்பர் கொடுவரு மலரைச் சிந்தும்
வெறிவைத்த களிறும் பாகும் வீடவெங் கணிச்சி வீசிச்
செறிபத்த ரிடையூ றீர்ந்து சிவநெறி வழாது செய்யு
மெறிபத்த ரிணைத்தா ளுள்ளத் திருத்தியெம் மிடர்கடீர்வாம்.

எறிபத்த நாயனர் துதி—கருவூர்ப் புராணம்.

## II. எறிபத்த நாயனர் புராண வசனம்.

சோழ நாட்டிலே உறையூரிலே அரசாட்சி செய்துகொண்டிருந்த புகழ்ச் சோழரானவர் மேனுட்டரசர்கள் திறையளத்தலைக் காணும்பொருட்டுத் தமதாட்சிக்குள்ளாகிய கருவூரிலே வந்திருந்தார். அவர் தினந்தோறும் கருவூர்த் திருவானிலையில் எழுந்தருளியிருக்கின்ற பசுபதிநாயகரைத் தரிசித்துச் சிவனடியார்களைச் சிவனெனவே வழிபட்டு வாழ்ந்திருந்தார்.

அந்நாளிலே அவ்வூரில், சிவனடியார்களுக்கு இடர் நேர்ந்துழி இம்மெனப்போந்து இடர் செய்வாரைக் கடியும்பொருட்டு மழுப்படை யேந்திய கையை யுடையராகிய எறிபத்தரென்னும் பெரியவர் ஒருவரிருந்தார் அக்காலத்திலே அந்தணர் குலத்திற் றோன்றியவரான சிவகாமியாண்டாரென்பவர், நித்தலும் பொழுதுவிடியுமுன் எழுந்து, நீராடி, விதிப்படி திருநந்தவனத்திற் புகுந்து, திருப்பூங் கூடையிலே பலவித நறுமலர்களையும் இலைகளையும் யெடுத்து, அவைகளை இண்டை, தொடையல் முதலிய பலவகை மாலைகளாகத் தொடுத்துச் சிவபெருமானுக்குக் கொடுத்துவரும் நியமமுடையவராயிருந்தார்.

அவர், ஓர் நாள் தம் நியமப்படி பூக் கொய்தமைத்த பூங்கூடையைக் கோலிற்றூங்கவிட்டு, அதனைத் தோளிற் சுமந்து, வீதியிலே செல்லா நின்றார். அன்று மகா நவமியாகையால், நகரம் அலங்கரிக்கப்பட்டிருந்தது புகழ்ச்சோழரது பட்டவர்த்தன மென்னும் பெயரிய யானையும் அலங்கரிக்கப்பட்டுப், பாகர்களுடன் தெருவிற் பவனி வராநின்றது. அக்காலையில் அவ் யானைக்குச் சிவகாமியாண்டார் எதிர்ப்பட, யானை அவரது தோளிற் றூங்கப்பெற்ற திருப்பூங்கூடையைப் பறித்து, அதனுள்ளிருக்கும் மலர்களைச் சிந்திச் சிதறவிட்டுச் செருக்கோடு போயது.

சிவகாமியாண்டார் பதைத்து அதனைத் தொடர்ந்து தண்டுகொண்டு அடிக்கச் சென்றார். தமது தளர்ச்சியாற் பற்றலாற்றாது விழுந்து தரையடித்து எழுந்து *சிவதா!

---

*சிவதா என்பது ஆற்றாமையால் சிவபெருமானை விளித்து முறையிடுஞ் சொல்லாகும்; மங்கலத்தைக் கொடு என்பது பொருளாகும். (சிவதாதி—நலத்தைக் கொடுப்பவன்.)

சிவதா !! என்று முறையிட்டனர். அதுகேட்டு வந்த எறிபத்தர் அங்கு நிகழ்ந்ததைச் சிவகாமியாண்டார் உணர்த்த உணர்ந்து, மழுப்படையோடு யானையின் முன்னர்க் குதித்து வந்து, அதனது துதிக்கையைத் துணித்து வீழ்த்தி, யானையின் மீதிருந்த பாகரிருவரையும், யானையைச் சூழ்ந்து வந்த பரிக்காரர் மூவரையும் கொன்று நின்றார்.

அதனைக்கண்ட சிலர் ஓடி, பட்டவர்த்தனமும் பாகர்களும் கொல்லப்பட்டனர் என அரண்மனை வாயிற்காப்போனுக்கு அறிவிக்க, அவன் அரசரிடம் சென்று வணங்கிப் பாகர் முதலியவர்களை யானையுடன் சிலர் கொன்றனரென்று அறிவித்தான். அரசர், அது மாற்றலரால் நிகழ்ந்ததாக எண்ணிச் சிம்மாசனத்தினின்று மிழிந்து கோபாவேசத்துடன் ஒரு பரிமீதேறி யானைபட்ட களத்தை யடைந்தார். அரசரது குறிப்பை யுணர்ந்த சேனாதிபதியும் போர்க் கோலத்தோடு சேனைகளுடன் அவரைத் தொடர்ந்து வந்தான். அரசர் அங்கு பகைவராவார் யாரையுங் காணாது, தமதுட்ல் பொருளாவி மூன்றனையும் அடிமையாகப் படைத்துடைய சிவனடியார் நிற்பதைக் கண்டார். அவர் உடனே பரியினின்றும் இழிந்து சிவனடியாரது பாதங்களிலே வீழ்ந்து வணங்கி, "சுவாமி! அடியேன் தீர விசாரியாமல் இவ்வுழி யடைந்தேன்; தேவரீர் செய்கையென்றுணரப் பெற்றால் இங்கு வருவே னல்லேன் ; யானை செய்த சிவாபராதமென்னையோ ? அதுவு முணர்ந்திலேன்" என்றார். எறிபத்தர், அரசரே! சிவகாமியாண்டார் சிவபெருமானுக்குக் கொணர்ந்த செழுமலரை இவ்யானை பறித்துச் சிதறியது ; பாகர் முதலாயினோர் அது கண்டும் விலக்கா தொழிந்தார்கள்; ஆதலின் யானையையும் பாகரையுந் தடிந்தேன் என்று கூறினர்.

புகழ்ச்சோழர் மீட்டும் வணங்கி, அடிகளே ! இப்பெருங் கொடிய சிவாபராதத்திற்குக் காரணன் யானன்றோ ! என்னையுங் கோறல் அமையும் ; தேவரீர் கையிலுள்ள மழுப்படை மிகப் பரிசுத்தமானதாகையால், அது பாவியாகிய அடியேனைச் சிதைத்தற் கொல்லாது. எனது உடைவாளைத் தருகின்றேன், அதுகொண்டு என்னைத் தடிந்து எனது குற்றத்தைத் தீர்த்தல் வேண்டுமென்று பிரார்த்தித்து உடைவாளைக் கொடுத்தார். எறிபத்தர் அரசரது திருவுள்ளக்கிடையை உணர்ந்து, வாளை வாங்காதொழியின், அரசு இறந்து படுமென்று கருதி, கருணையோடு அரசரிடமிருந்து வாளை வாங்கினர்; அரசர் உய்ந்தேன், உய்ந்தேன் என்று மகிழ்ந்து குனிந்து நின்றனர்.

வாளை வாங்கிய எறிபத்தர் வேறு ஒன்றுஞ் செய்வதற்குத் தோன்றாதவராய், இத்தகைய அன்பருக்குத் தீங்கு நினைத்ததால் தமது களத்தை ஈர்தலேதகும் என்று துணிந்து கழுத்திடை வாளைப்பூட்டி அரியலுற்றார். அதனைக் கண்ணுற்ற புகழ்ச்சோழர் மிகவும் அஞ்சி எறிபத்தரது திருக்கரத்தைப் பற்றிக்கொள்ள, எறிபத்தரும் விடாராய் வருந்த, இவ்வன்பர்களது அன்புக்கிரங்கி ஆகாயவாணியானது "அன்பர்காள்! உங்களது மெய்யன்பினை உலகமறிந்து உய்யுமாறு யானை பூவைச் சிந்தும்படி திருவருள் கூட்டியது" என்று எழுந்தது.

அக்காலையில் எறிபத்தர் புகழ்ச்சோழர் என்னும் இரண்டு உண்மை நாயன்மார்களும் ஒருவரை யொருவர் வணங்கி, இருவரும் ஆகாயவாக்கைத் துதித்துச் சிறந்தார்கள். உடனே பட்டிறந்த யானையும், பாகரும் உயிர் பெற்றெழுந்தார்கள். சிவகாமியாண்டாரது திருப்பூங் கூடையும் மலர்களால் நிரம்பிற்று; தேவதுந்துமி யார்த்தன; தேவர்கள் பூமழை பொழிந்தார்கள்; அடியார்கள் ஆரவாரித்தார்கள். எறிபத்த நாயனாரின் வேண்டுகோளுக் கிணங்கிப் புகழ்ச்சோழ நாயனார் தமது யானைமீதேறித் தமது அரசாட்சியை நடத்தச் சென்றார். இவ்வற்புதம் நிகழ்ந்த பின்னர்ச் சிவகாமியாண்டார் எறிபத்த நாயனார் மூலமாகப் பசுபதி நாயகர் தமக்கு அருள் செய்ததை நினைந்து நினைந்து, வியந்து வியந்து தமது திருத்தொண்டின்மேற் சென்றார். எறிபத்த நாயனாரும் சின்னாள் தமது சிவத் தொண்டைச் செய்திருந்து முடிவில் சிவகணத் தலைவரானார்.

## III. புராண பாத்திரங்கள் குறிக்கும் தத்துவங்கள்.

இப்புராணத்தில் வந்துள்ளவர்களும் அவர்கள் பயன்படுத்தியனவும் குறிக்கின்ற அடிப்பொருள்கள் (தத்துவங்கள்) அவ்வவற்றிற்கு நேராகக் கீழே குறிப்பிடப்படுகின்றன:

1. கருவூர்—சரீரம்.
2. ஆனிலை—பசு நிலை (புருவ மையம்).
3. பசுபதி—பசுக்களுக்கேற்ற விடம் (இறைவன்).
4. சிவகாமி யாண்டார்—சிவப்பிரியையான சீவன்.

5. புட்பக்குடலை—மனம்.
6. தண்டு—வீணாதண்டு (முதுகந்தண்டு).
7. புட்பம்—அஹிம்சாதி அட்டபுட்பம்.
8. யானை—ஆணவம்.
9. பாகரிருவர்—இருவினை.
10. பரிக்காரர் மூவர்—பரிக்கிரக (தாங்கும்) சக்திகள் மூன்று; அஃதாவது மூன்று மாயை; அவை சுத்த, சுத்தாசுத்த, அசுத்த மாயைகளாம்.
11. அரசன்—திரோதான சக்தி.
12. யானை, பாகர், பரிக்காரர், பரிக்காரர்களின் காரியங்கள், அரசன்—ஆணவாதி பஞ்சமலங்கள்.
13. எறிபத்தநாயனார்—ஞானாசாரியார்.
14. மழு—ஞானவாள்.

---

## IV. தத்துவக் குறிப்பிற்கான மேற்கோள்கள், விளக்கங்கள்.

இவ்வாறு குறிப்பிடப்படுவதற்குத் தக்க மேற்கோள்களையும் விளக்கங்களையும் கீழே ஒவ்வொரு தலைப்பின் கீழ்க் காணலாம் :—

### 1. கருவூரென்பது சரீரமெனல்.

கருவூருக்குக் கருப்பபுரி யெனப் பெயரிருப்பதால் அது கருக்குழியில் அல்லது கருப்பத்தில் உற்பத்தியாகின்ற சரீரமாகும்.

“ஊர்த்தனங் கருவூரன்னை யுதரத்தில்”

—கருவூர்ப்புராணம்-பாயிரம்-16.

“பொருவிலர் சொற்றிடுங் கருப்பப்புரி வடசொற் புராணத்தை”

—கரு. புரா. பாயிரம்-27.

“பத்தர் பரவு கருப்பபுரிவரு பச்சைவடி வொரு பக்கனர்”

—கரு. புரா. ஆம்பிராவதி நதிச்சருக்கம்-1.

“செப்பருங் கருப்பபுரியெனும் பெருந்திகழ்வுறச் செப்புவர்”

—கரு. புரா. ஆம்பி.-43.

"யாதானு மிவ்வுடம்பாற் செய்வினைக ளேறுயர்த்தான்
பாதார விந்தத்தின் பாலாக வெனும் பரிவாற்
காதார்வெண் குழையவர்க்காம் பணிசெய்வார் கருக்குழியிற்
போதார்க ளவர்புகழ்க்குப் புவனமெலாம் போதாவால்"

பெ. புரா. —பத்தராய்ப் பணிவார் புராணம்-4.

## 2. ஆனிலையென்பது பசு நிலையெனல்.

சீவர்கள் வழிபடுவதற்கான இடமாய்க் கருவூரிலுள்ள ஆனிலை யென்பதானது சீவர்களுக்குரிய கேவல, சகல, சுத்தா வத்தைகளுள், கருவிகளில்லாத கேவலாவத்தையையும், கருவிகளின் வயப்படாத சுத்தாவத்தையையும் நீக்கிக், கருவிகளோடு கூடிய சகலாவத்தைக் குரிய லலாடத்தானமாகும். இதுவே சீவன் சிவனைத் தியானிப்பதற்குரிய இடம். இதை அடைந்த பிறகுதான் சிவனை அடையமுடியும்.

"ஓங்கு நுதலாய வோலக்க மண்டபத்தில்"

—போற்றிப் பஃறொடை-33.

"சாக்கிரமா நுதலினில்"

—தாயுமானவர் பாடல், ஆசையெனும்-25.

## 3. பசுபதி யென்பது பசுக்களுக்கேற்ற விடமெனல்.

பசுபதியாவது சீவர்கள் சனன மரண மார்க்கத்தில் மீளாதிருப்பதற் கேற்ற தங்குமிடமாகும்; இதுதான் உயிர்கட்கு உறைவிடம்; இது சிவம்.

"எற்றதோர் பதியைச் சேர்தல் பசு வினுக்கியல்புதானே"

—கரு. புரா. சராசரச் சருக்கம்-27.

"பற்றற்றார் சேர் பழம்பதி"

—பாவநாசம்- திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.

"பசுபதி"—பசுபதித் திருவிருத்தம் ஷை. ஷை

"யார்க்கும் பற்றிடமாய பரம்பொருளை"

—பெ. புரா. தடுத்தாட்கொண்ட புரா.-125.

"நாகப்பூணினன் திருச் சரணமே யுயிர்க்கெலாம் புகலிடமது
தேரே." —வைராக்கிய சதகம்-7.

"இது கதி—இது சிவம்."— மைத்ராயணுேப நிடதம் 6-35.

"எவன் அகாமனுய், நிஷ்காமனுய், ஆப்தகாமனுய், (பரம) ஆன்ம காமனுய், இருக்கின்ருனே, அவனே விட்டுப் பிராணன்கள் உற்கிரமிப்பதில்லை (மேற்செல்வதில்லை)" எ-து.

—மத்தியாந்தன சாகை காண்க.

"செல்கதியாய்" —சிவப்பிரகாசம் பொது-1.

"சிகரமாகிய நகரியை யடைந்தது சீவன்"

ஷை —பசுபதிபாச விளக்கம்.

"மானுடர்களாய பசுமாய"

—கரு. புரா. விபண்டகச் சருக்கம்-6.

## 4. சிவகாமியாண்டாரென்பது சிவப்பிரியனுன சீவனெனல்.

சிவகாமி யாண்டாரென்பது சிவகாமியும் ஆண்டாரும் எனப்பட்டு, சிவப்பிரியையும் அநாதி முதலே சிவனுல் ஆட்கொள்ளப்பட்டதுமாகிய சீவனெனப் பொருள் பெறும்.

சிவகாமி யென்ற பதத்திலுள்ள பெண்பால் விகுதியானது, சீவனுனது இன்பத்தைப் பெறுதற்குரியதென்றும், சீவன் சிவனைக் காமுற்றதனுலே சிவமே இன்பத்தைச் சீவனுக்குக் கொடுக்கும் ஆற்றலுடையதென்றும், அறிவிக்கின்றது.

"இருவர் மடந்தையர்க் கென்பயனின் புண்டா
மொருவ னொருத்தி யுறின்."

—திருவருட்பயன், இன்புறுநிலை-2.

ஒருவனொருத்தி யென்றது முறையே தலைமையும் தன்மையும்பற்றி எனக.

"கருவிகட் கிறைமை காட்டுபு நிற்றலின்
புருட நாமம் புனைந்தன மாயினு
மத்தநிற் குறிப்பிற் சத்திக ளியாமே."

—பண்டார மும்மணிக் கோவை.

"மானிலையே மறையோ னிலையே மகவானிலையே முதலாம்
வானிலையானவை தாநிலையாவென மற்றவை சற்று மெனுர்
மேனிலை தேர்தரு ஞானியருள்ளம் விரும்பு மரும்பொருடா
ஞனிலைமேவிய பசுபதிநாயக ரடிய ரடிப் பொடியே."

—கரு. புரா. எறிபத்தச்சருக்கம்-1.

"ஆளெனப் புதிதில் வந்தடைந்தில மத்த."

—கோயில்நான்மணி மாலை-24.

"திண்ணிய வன்புகூர்ந்த சிவகாமியாண்டா ரென்னும்
புண்ணிய முனிவர்." —பெ. புரா. எறி. புரா-8.

எனத் தொண்டர் சீர் பரவுவார் திருவாய் மலர்ந்தருளின மையினுலே, சிவத்தைப் பெறுவதற்குத் திறம்பாத அன்பும், மறனிலா அறமும் வேண்டுமெனப் பெறப்படுகின்றது.

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." —திருக்குறள்-666.

என்ற தெய்வ நூலானது எண்ணியதைப் பெறுவதற்கு மனத்திட்பம் வேண்டுமெனக் கூறுகின்றது.

"சாத்திர மோதுஞ் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப்போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்த அப்பார்வைப் பசுமரத் தாணிபோ
லார்த்த பிறவி யறுக்கலு மாமே."

—திருமந்திரம் 1631 (தவம்-8.)

"மனந்தடுமாறேல்"—என்பது ஆத்திசூடி.

"என்பே விறகா விறைச்சி யறுத்திட்டு
பொன்போ லெரியிற் பொரியவறுப்பினு
மன்போடியைந்து அகங்குழை வார்க் கன்றி
யென்போன் மணியினை யெய்த வொண்ணுதே."

—திருமந்திரம் 272 (அன்புடைமை-3.)

என்று திருமூலர் சிவத்தைப் பெறுவதற்கு உருகிய அன்பு வேண்டுமெனக் கூறுகின்றார்.

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்குநிற்கும் பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்ப ரவர்தமை நாணியே.

—திருநா. தேவா. தனித்திருக்குறுந்தொகை-9.

"உள்ள முள்கலந் தேத்தவல் லார்க்கலாற்
கள்ள முள்ளவர்க் கருள்செய் வானலன்
வெள்ளமும் மரவும் விரவுஞ் சடை
வள்ள லாகிய வான்மியூ ரீசனே."

—திருநா. தே., திருவான்மியூர் திருக்குறுந்தொகை-4.

இனி, "தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள்வது." —திருக்குறள்-262.

என்ற தெய்வநூல் (பசு) புண்ணிய முடையாரே (சிவ) புண்ணியத்தைச் செய்ய அருகராவர் என்கின்றது.

இதனால் சிவனுனது பல பிறவிகளிலே நிட்காமிய பசு புண்ணியங்களைச் செய்ததின் பயனுகச் சிவபுண்ணியங்களைச் செய்து சிவத்தைப் பெறுமென அறியக்கிடக்கின்றது.

## 5. புட்பக்குடலை யென்பது மனமெனல்.

சிவபெருமானைப் புறத்தே பூசிப்பதற்குரிய புட்பங்களைத் தன்னிடத்தே கொள்ளப்பெறும் புட்பக் குடலையைப் போலவே, அகத்தே பூசிப்பதற்குரிய அருண்மயமான புட்பங்களைத் தன்னிடத்தே கொள்ளப் பெறுவது மனமானதினுலே மனதே புட்பக்குடலையாகும்.

"தன் பேரிதயமா மலர்க்கிடை யெடுத்தே"

—வில்லிபாரதம், பழம் பொருந்து சருக்கம்-20.

என்ற வாக்கு இதனை வலியுறுத்துகின்றது.

## 6. தண்டு என்பது வீணுதண்டெனல்.

புட்பக் குடலையைத் தண்டில் தொங்கவிடுவதுண்டாகையினுலே, மனமாகிய புட்பக் குடலையைத் தொங்கவிடப்பட்ட தண்டு வீணுதண்டாகும். அதில் மனந் தொங்குதலானது வேறோர் பற்றில்லா திருத்தலாகும். வீணுதண்டென்பது பல கிரந்திகளை* யுடையதாயும் சுழிமுனை நாடியைத் தன்னுள்ளே கொண்டதாயும் உள்ளது.

---

*கணு, முடிச்சு.

கருவூர்ப் புராணம எறிபத்தச் சருக்கத்தில் "முரணிய தண்டு" என்றும், "விஞ்சிய தண்டு" என்றும், எறிபத்த நாயனுர் புராணத்தில்† "வன்றனித்தண்டு" என்றும் கூறப் பட்டிருத்தலும் அதனை வலியுறுத்துகின்றது.

"முரணியதண்டு" என்றமையினுலே கணுக்களையுடைய தண்டு என்றும், "விஞ்சிய தண்டு" என்றமையினுலே தாவ ரத்தின் பாற்பட்ட தண்டன்றென்றும், "வன்றனித்தண்டு" என்றமையினுலே அத்தண்டு மிக்க வலியுடையதாய்ச், சுழி முனை நாடிக் காதாரமாய், ஒப்பற்றதாய் உள்ள தண்டென் றும் அறியக்கிடக்கின்றது.

போற்றிய தலைமை நாற்சது ரத்துள்
ஓங்கா ரஞ்சேர் ரீங்கா ரத்து
மூலை யிரண்டினுஞ் சாலத் தோன்றி
யிடைபிங் கலைக ளிடம்வலம் நிற்கு
மேலை மூலை மூலை மாகச்
சுழுமுனை சித்திரம் வழுவில் வச்சிர
மொன்றுக் கொன்று சென்றுள் ளாகி
யுரைசெய் கோணத் தொருதலை சொருகி
இருதலை திரண்ட வோருவேய் போலக்
கோணுற நிற்கும் வீணு தண்டி
னூடே யூடி நாடி மூன்றும்
பிரம ரந்திர முருவி நிற்கு
மிடைபிங் கலைக ணடுவுதண் டுடனே
தொடர்வறப் பின்னி யடைவா தார
மாறினுங் கூடி வேறுவே ருகிப்
புருவ மத்திம மருவி நாசிக்
கிடமும் வலமு மிடமென நிற்கும்" —பிராசாத அகவல்-1.

## 7. புட்பமென்பது அருண்ஞானமயமாகிய புட்பங்களெனல்.

சிவபெருமானை அகத்தே பூசிப்பவர்கள், க்ஷமை(பொறு மை)யாகிய அருக்கிய பாத்திரத்திலே அமிருதமாகிய அருக் கிய சலத்தை நிரப்பி, க்ஷுப்த சத்தியினின்றும் பெருகுகின்ற அமிர்தமாகிய பாலை அபிடேகித்து, புத்தியாகிய குங்குமப்பூ, கற்பூரம், கத்தூரி, கோரோசனை முதலியவைகளோடு கூடிய கலவையைச் சாத்தி, மனமாகிய ஆதார பாத்திரத்திலே தற்

† பெரிய புராணம்.

போதமாகிய நிவேதனத்தை நிவேதித்து, பிராண வாயுவால் மூலாக்கினியைச் சொலிப்பித்து, அதனுல் அகங்காரம் கர்வங் களாகின்ற தூப தீபங்களைக் கொளுத்திப் பணிமாறச் செய்து, தன்மாத்திரைகளில் கந்தமாகிய பரிமள திரவியங்களையும், ரசமாகிய சலத்தையும், ரூபமாகிய பல்வகைத் தீபங்களையும், பரிசமாகிய சாமரை முதலியவைகளையும், சப்தமாகிய கீத வாத்தியங்களையும், பிருதிவியாகிய நைவேத்தியத்தையும், அப்புவாகிய அருந்தத்தக்க சலத்தையும், தேயுவாகிய கண்ணுடியையும், வாயுவாகிய விசிறியையும், ஆகாயமாகிய தோத்திரங்களையுங் கொண்டு சத்தியாதி சத்திபரியந்தம் ஸ்திராசனம் பூசித்து, ஆசனமூர்த்தி மூலத்தால் மூர்த்திமானைப்பூசைக் குறியி லெழுந்தருளப் பிரார்த்தித்து, அபிடேகாதிகளைச் செய்து சோட சோபசாரத்துடன் பூசையை முடித்து அஹிம் சாதி அட்ட புட்பங்களால்* அர்ச்சித்துப் பூசிப்பார்கள்.

## 8. யானையாவது ஆணவமெனல்.

வலிமையாலும், நிறத்தாலும், பீடாலும், வடிவத்தின் பெருமையாலும் யானையைப் போல்வது ஆணவமாதலாலே யானையானது ஆணவமாகும்.

"ஆணவ மலமேன் ரேதுமடசினக் களிற்றை நாளு
மேணமை யருளென் ரேது மிகற்ரேட்டி கொண்டி யாருங்
காணவென் ருள்ளார் நம்மை யென்செயக் கடவ ரென்று
நாணமுட் கிடப்ப வஞ்சி யிரிவன நகுமா லியானை."

—திருப்பெருந்துறைப் புராணம், திருப்பெருந்துறையடைந்த படலம்-28.

---

*அஹிம்சாதி அட்ட புட்பங்களாவன:— அஹிம்சை, இந்திரிய நிக்கிரகம், சாந்தி, தயை, ஞானம், தவம், சத்தியம், பாவனை என்பன. இவ்விடத்தில் கும்ப பூசைக்குரிய அட்ட புட்பங்களான இருதயம், சிரசு, சிகை, கவசம், அத்திரம், நேத்திரம், வித்தியாதேகம் மூலமெனும் எண்வகையும், புறப்பூசையில் அர்ச்சனைக்குரிய அட்ட புட்பங்களான பவாதி நாமங்களாகிய எண்வகையும் உண்டாகையினுலே, அவைகள் வேறு, அஹிம்சாதி அட்டபுட்பங்கள் வேறென அறியவேண்டும். பவாதி எண்வகை நாமங்களாவன:—பவன், சர்வன், உருத்திரன், பீமன், மகாதேவன், உக்கிரன், சோமன், பசுபதி என்பனவாம். இனி அட்ட புட்பமெனக் கொண்டால், அட்ட—செகுத்த அல்லது நிக்கிரகித்த, புட்பம்—இந்திரியங்கள் எனப் பொருள் தரும்; இதனை "எறிபத்தர்" என்ற பெயரே விளக்குகின்றது.

"அப்பொழுதணைய வொட்டா தடற்களி றகன்று போக"

—எறிபத்த நாயனார் புராணம்-15.

அடற்களி றென்றமையாலே கொல்லப்படத்தக்க களிறு எனப் பெறப்படுகின்றது. எனவே, அடியார்கள் கொல்வதற்கு உரியதாயுள்ளது ஆணவமேயாகையால் யானையை ஆணவமெனலாயிற்று.

"தொண்ட ரஞ்சுகளிறு மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டை கட்டி வழிபாடு செய்யுமிட மென்பரால்"

—திருஞா. தேவா., திருக்கேதாரம்-1.

"மன்றவ ரடியார்க் கென்றும் வழிப்பகை களிறே யன்றே
கொன்றது வீழ்ப்ப னென்று கொலைமழு வெடுத்து வந்தார்"

—பெ. புரா., எறிபத்த நாயனார் புராணம்-20.

என்ற அருண்மொழித் தேவர் திருவாக்கு, அடியார்க்குப் பகையாயுள்ளது ஆணவமென்பதை வலியுறுத்துகின்றது.

## 9. பாகரிருவரும் இருவினைகளெனல்,

யானையானது பாகர்களின் வழியே யொழுகித் தனது காரியங்களைச் செய்வது போலவே, ஆணவமும் இருவினைகளைத் தனக்கு விலகாத துணையாகக் கொண்டு, அவைகளின் வழியாகவே அஞர்† முதலியனவாக* எண்ணப்படும் தனது காரியங்களை ஆன்மாவினிடத்திலே செய்து வருவதால் பாகரிருவரும் இருவினைகளாகும்.

"மிசை கொண்டா ரிருவர்" —எறிபத்தநாயனார் புராணம்-25.

என்றதனாலே இரண்டு பாகர் எனப் பெற்றதால் அவர்களை இருவினைகளென்றதாகும். இருவினைகளாவன நல்வினை தீவினைகளாம்.

"மருவினைப் பாகன் வாயில் மண்ணட்டா"

—சத்திய ஞான போதம், காப்புச் செய்யுள்.

---

† வருத்தம்.

* விகற்பம், கற்பம், குரோதம், மோகம், கொலை, அஞர், மதம், நகை

—இருபா இருபஃது–4.

## 10. பரிக்காரர் மூவர் என்பது மூன்று மாயை யெனல்.

யானையானது பாகரால் செலுத்தப்பட்டாலும் பரிக்காரர் களையே தனக்குப் பக்கத் துணையாகக்கொண்டு செல்வதைப் போல, ஆணவமானது தனது ஆவாரக, (மறைக்கும்) அதோ நியாமக (கீழ்ப்போக நிலை) சக்திகளால் ஆன்மாக்களுக்குக் கேவல சகலாவத்தைகளில், அஞ்ஞானத்தை நிகழ்த்தும் போது, மூன்று மாயைகளும் அதற்குப் பக்கத் துணையாக நிற்பதால் பரிக்காரர் மூவரும் மூன்று பரிக்கிரக சக்திகளாகும். பரிக்கிரக சக்தியென்றது மாயையை, (பரிக்கிரகசக்தி—தாங்குஞ்சக்தி.)

மூன்று மாயைகளாவன;— சுத்த மாயை, சுத்தாசுத்த மாயை, அசுத்த மாயை என்பனவாம்.

"மருங்கு வந்த வெய்யகோற் பாகர் மூவர்"

—எறிபத்த நாயனார் புராணம் 25.

காமிகாகமம், தண்டபங்கி நியாஸப் படலம், 6-வது சுலோகத்தின் பொருள்:— சக்தியானது பரிக்கிரகசக்தி, ஸ்வசக்தி யென இரண்டு விதமாகும். பரிக்கிரக சக்தியாவது பிரகிருதி யாகும்; ஸ்வசக்தியாவது மனோன்மணி சக்தியாகும். பிரகிருதி என்றது மாயையை.

"விண்ட பிரகிருதியே மாயை"

—வாயு சங்கிதை, ஞானநிலைமை யுரைத்த அத்தியாயம்-8.

"அறைய மகேச்சுரன் சக்தி மாயையாம்" —ஷை ஷை 10.

"மூலமாம் பகுதிதான் முகிழ்ந்த வார்மூலக்
கோலவார் தொடியுமை குறித்த வேவலாற்
சாலுமா மாயைசொன் மாயை சாற்றிடு
மேல்பிர கிருதியென் றியைந்து மன்னுமால்."*

—வாயு-சங்.,-அத்துவாக்களினியல்புரைத்த வத்தியாயம்-20.

"விந்துவின் மாயையாகி மாயையினவ்வியத்தம் வந்திடும்."§

—சிவஞான சித்தியார், 1. சூத். 19.

---

* இப்பாடலில் மூலப்பகுதி-மாயை, மாமாயை-சுத்தமாயை, மாயை-சுத்தா சுத்தமாயை, பிரகிருதி-அசுத்தமாயை.

§ விந்து-சுத்த மாயை, மாயை-சுத்தாசுத்தமாயை, அவ்வியத்தம்-அசுத்தமாயை.

இனி, மூன்று மாயைகளையும் கூறிவிட்டபடியினாலே அவைகளின் காரியமாகிய மாயேயத்தையும் கூறியபடியாகும்.

"மாயையின் காரியத்தை மாயேயமலம தென்றும் ..... ஆய்வர்"
—சிவஞான சித்தி, 2-ம் சூத்திரம்-87.

## 11. அரசன் திரோதான சத்தியெனல்.

யானையும் பாகரும் பரிக்காரரும் அரசன தாணையினாலே தொழிற்படுவதைப் போலவே, ஆணவம், கன்மம், மாயை, மாயேயங்கள் எல்லாம் திரோதன சத்தியாற் றொழிற்படுவதால், அரசன் திரோதான சத்தியாகும்.

"ஈசனது சத்திமல மூன்றினையு மேவுதலாற்
பாசமெனும் பேரதற்கு பாங்கு." —இறைவனூற்பயன்.

அரசன் யானை முதலியவைகளுக்குத் தலைவனானமை பற்றிச் "சென்னி" யென்ற பெயரை இவ்வரசன் சிறப்பாய் வகித்தது, மலங்களுக்குத் தலைமையாய் நின்று அவைகளைச் செலுத்துந் திரோதான சத்தியே முதற்சத்தி யென்பதைப் புலப்படுத்துகின்றது.

"மன்னவன் றன்னை நோக்கி வானவ ரீசர் நேசர்
சென்னியித் துங்கவேழம்" —எறி. புரா.—40.

"திரோதமல மிறைசத்தி யான்மாவைக் கன்மஞ்
சேருமள வாகிமலச் செறிவுநீங் களவும்
விரோதமுறை போலொக்க மறைப்பாக நின்று
மிக்கதுதான் மிகுமாயை விரித்தறிவு பொருந்தி
வரோதயமாம் வேதங்கள் பலகலைக ளாய்ந்து
வரினுமறி யாதவகை நிரவுமத னாலிப்
பராவருளை மலமெனவும் பகர்வரது தானே
பரமனையுங் கருணையினாற் றெரிவுறப்பண் ணிடுமே"
—தத்துவப் பிரகாசம்-37.

## 12. யானை, பாகர், பரிக்காரர், பரிக்காரரின் காரியங்கள், அரசன் ஆகிய இவர்கள் ஆணவமாதி பஞ்ச மலங்களெனல்.

இவ்வாறு கூறப்பட்ட யானையும், பாகரிருவரும், பரிக்காரர் மூவரும் அவர்களின் காரியங்களும், அரசனும் ஆகிய

இவர்கள் முறையே ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி யெனும் பஞ்ச மலங்க ளாவார்கள்.*

"மோகமிக வுயிர் கடொறு முடனாய் நிற்கு
மூலவா ணவமொன்று முயங்கி நின்று
பாகமிக வுதவுதிரோ தாயி யொன்று
பகர்மாயை யொன்றுபடர் கன்ம மொன்று
தேகமுறு கரணமொடு புவன போகச்
செயலாரு மாமாயைத் திரட்சி யொன்றென்
றாகமல மைந்தென்ப ரைந்து மாறு
தருளென்ப தரிதென்ப ரறிந்துளோரே."

—சிவப்பிரகாசம், பொது-14.

## 13. எறிபத்த நாயனர் ஞானசாரியார் எனல்.

எறிபத்தர் என்பது ஞானேந்திரியங்களைந்தும் கன்மேந்திரியங்களைந்துமாகிய பத்தையும் எறிந்தவர் என்பதாம், எறிபற்றர் என்பது எறிபத்தரென மருவியதாகக்† கொண்டால், எறிபற்றரென்பது அநாதி பற்றாகவுள்ள ஆணவ மாயா கன்மங்களாகிய பற்றுக்களையும் அவைகளின் காரணமாக வருகின்ற பொருட் சார்பு உயிர்ச் சார்புகளாகிய பற்றுக்களையும் எறிந்தவரென்றும் பொருள் தருவதால், அத்தகைய பற்றுக்களைக் களைந்த அறிவராகும் பெருங்குணத்தார் என்பதாம். எனவே எல்லை தெரிய வொண்ணாத ஞானசாரியரே எறிபத்த நாயனாராகும். நாயனாரென்ற சொல்லால் இவர் ஞானசாரியரிற் றலைவரென அறியக்கிடக்கின்றது.

"வைத்த மூல மலத்தை மாயை மலத்தை வாவுகன் மத்தையே
கைத்து ஞான நிலைத்து நீடு கருத்தர் மாவிர தத்தனார்
நித்தர் சோதி நிறத்த ராதி நிருத்தர் நீலமிடற்றினார்
முத்த வாணகை யத்தர்தாடொழு முத்தனா ரேறிபத்தனார்"

—சரு. புரா. எறி. சரு.-7.

"எப்பற்றினையுமற வெறிவா ரெல்லை தெரிய வொண்ணாதார்"

—பெ. புரா., விறன்மிண்ட நாயனார் புராணம்-4.

---

* ஆணவாதி பஞ்ச மலங்களைக் கெடுக்கவே விநாயகரும் ஐங்கரனயினார் என்பதை அறியவேண்டும்.

† பத்துடை யீசன் பழவடி யீர்—திருவாசகம், திருவெம்பாவை-3.

'பிழை செய்யாவிடிற் கொல்லார் பெருங்குணத்தா ரென்றெண்ணி''
—பெரி. புரா. எறிபத். புராண கீர்த்தனம் 5. சரணம்-1.

பெருங்குணத்தா ரென்றது எறிபத்த நாயனுரை.

## 14. மழு வென்பது ஞானவா ளெனல்.

பக்குவமுற்ற சீடனுக்கு மோட்ச தீட்சையாகிய நிர்வாண தீட்சை செய்யுமிடத்து ஞானசக்தியே* கர்த்தரி யென்னும் சக்தி (வாள்) வடிவாய்ப் பாசங்களைச் சேதிப்பதாலும், எறிபத்த நாயனுரது திருக்கரத்திலுள்ள வாளை ''பழமறை பரசுந் தூய பரசு'' என்றும், ''விடுசுடர் மழு'' வென்றும், ''மங்கல மழு'' வென்றும், ''திப்பியப் படை'' யென்றும், ''திரு மழு'' வென்றும் குறிப்பிட்டிருத்தலாலும், அந்த மழுவானது ஞானவாளாகும்.

வடமொழிச் சித்தாந்த சாராவளி கிரியாபாதம் 1:ல் கூறியுள்ளவாறு அநாதியான ஆணவமல மானது பரிபாக காலத்திலே பரிபக்குவமானபோது ஆதியாகிய திரோதான சக்தியானது அந்தப் புருட சிரேட்டனிடத்தில் பதிகின்றது. அந்தச் சக்தி பதிந்தபோது, இந்தப் புருடனுக்குச் சம்சாரத்தில் வெறுப்பும் மோட்சத்தில் விருப்பும் சிரேட்ட குரு சேவையுமாகிய அடையாளம் உண்டாகின்றது. அந்த அடையாளத்திலே சக்தி பாதத்தை யறிந்த பின்பு, அந்த சற்குருவை அதிட்டித்திருக்கும் பரசிவனுனவர் ஆன்ம சொரூபத்தை யறியும் பொருட்டுக் குருசமீபத்தில் வந்த இந்தப் புருடனுடைய மலமாயா கன்மங்களாகிய பாசங்கள் மூன்றையும், குண்ட மண்டலாதிகளை முன்னிட்டுச் செய்யும் மாந்திரிக தீட்சையால் இவனைத் தீட்சிப்பித்து, பாச சூத்திரங்களைச் சேதிக்கும் ஞான சத்தி சொரூபமான வாளினுலே நன்ருகச் சேதித்துப் பிரசித்தமான அந்தச் சிவ சொரூபத்தை இவனுக்குப் பிரகாசிக்கச் செய்து சிவ பதத்தை அடையச் செய்கின்ருர். இவ்வாறு தீட்சையினுலே பரிசுத்தனுகச் செய்யப்பட்ட இந்தப் புருடனுனவன், தீட்சையான பின்பு நித்திய நைமித்திக அங்கமாய் மலாதி பாசங்களை அழிக்கும் சைவ சமயத்திற்குச் சிறப்பான சைவாசாரங்களை அநுட்டிக்க வேண்டும் எ-று.

---

*யாக பசுக்களைச் சேதிக்கும் ஆயுதத்திற்கு ஸ்வதிதி என்ற பெயருண்டு.

"முக்குறும்பை ஞானநாந் தகங்கொடு குறைத்து
வென்றுவாழ் முனிவீர்" —கரு. புரா. ஆம்பிராவதி நதிச்சருக்கம்-58.

"மறை யுறை கழித்த ஞானவாள்"
—திருவிளை. புரா. நரி பரியாக்கிய படலம்-37.

"சினவிடைப் பாக னடியரை யிழைத்த தீமையிப் பரிசினுற் றீரா" வினையவித் தீமைக் குரியன்யா னன்றே வெனையுமிக் களத்திடைக் கோறல், பனவநல் வழக்கீதடுவதற் குனது பரசுதிப் பியப்படை படுதற், கனையமா தவஞ்செய் தேனிலே னிதனு லடுதியென் றங்கைவாட் கொடுத்தார்." —கரு. புரா. எறி. சரு. 58.

"பழமறை பரசுந் தூய பரசுமுன் னெடுக்கப் பெற்றூர்"
—பெ. பூரா. எறி. புரா.-7.

"பரசாயுதத்தினைப் புகழ்தாங்கக் கொண்டு"
—பெ. புராண கீர்த்தனை 1-ல் 3.

"விடுசுடர் மழுவொன் றேந்தி, வேறிரு தடக்கைத் தாய
வடுகளி றென்ன நின்ற வன்பரை முன்பு கண்டான்."
—பெரி. புரா, எறி. புரா. 34.

"ஞான வோள்வாள் பூமுக மழுங்கக்
கொன்றுசினந் தணியாத் தண்டாச் சீற்றத்து
மறவனை யல்லையோ மற்றே யிறைவ* —ஞானமிர்தம்-46.

பொறைப்பெருங் கவசம் புக்குச் செறுப்பருஞ்
செயறீர் கனைகழல் கட்டி மயலொடு
காம நீத்த கயந்தலை கடிதூர்ந்
தச்ச மின்மையிற் றுணையின் றுங்கு
மெய்ப்படு பேருணர் விசைய மள்ளர்
பூமுக ஞானப் புகர்வா ளேந்தி
யைம்புல னடக்கி யறுபகை யோட்டி
யிருவினை வீட்டி யொருவழிக் கொளீஇய

---

*இதன் பொருள் ஞானமாகிய அழகியவாள் பொலிவு பொருந்திய முகங் குளிக்கச் சங்கரித்து மற்றும் பாசச் சேதம் பண்ண பக்குவரைத் தேடி கோபந்தணியாதே யிருக்கும் அளவில்லாத மாற்சரியத்தையுடைய மறவனல்லையோ?

வுள்ளமோ டுணர்வுசு ழொடுக்கி
யுள்ளுந ருணர்வ துணர்வின் பாலே.‡ —ஞானமிர்தம் 60.

"மங்கலமழுவாற் கொல்கை வழக்குமன் றிதுவா மென்று
செங்கையா லுடைவாள் வாங்கிக் கொடுத்தனர் தீர்வு நேர்வார்"
—பெரி. புரா. எறி. புரா. 42.

"கொன்றூர் நின்ற-திருமழுக்கொண்டவர்"
—எறி. புரா. கீர்த். விருத்தம்-5.

செழுந்திரு மழுவினால் அழிந்துடல் விழுந்திடச்
செத்த பாகரொடும் அத்தியும் எழுந்திட.
—எறி. புரா. கீர்த். 6, அநுபல்லவி.

## V. புராண நிகழ்ச்சிகளின் தத்துவ அர்த்தங்கள்.

இனி இவ் அடிப் பொருள்கள் (தத்துவங்கள்) இவ் வரலாற்றில் நிகழ்த்திய செயல்களின் உட்கிடைகளைத் தக்க மேற்கோள்களுடன் கீழே காணலாம்.

### 1. புட்பம் தொடுத்தலென்பது சிவபிரானை அன்பிற் பிணிப்புறச் செய்தலாகு மெனல்.

புட்பந் தொடுத்துச் சாத்துதலாவது, பரஞ்சுடராகிய சிவபெருமானைத் தொடராகத் தொடருதற்குச் சிந்தை தெளியும்படி, அன்பாகிய நாரில் மனமாகிய கரத்தால் அஹிம்சாதி

‡ இதன் பொருள்:— பெரிய உண்மைஞானத்தையுடைய வலிய வீரரான விசாரவான்கள் பொறுத்தற்கரிய வெகுளியும் துன்பமும் வந்தால் சகிக்கும் பொறுமையாகிய பெரிய கவசத்தை யிட்டு, எதிரியாற் செயித்தற்கு அரிதாகிய தன்னைற் பிறருக்கும் பிறரால் தனக்கும் ஒரு செயல் இல்லை என்னும் ஒலிக்கப்படாநின்ற வீரக்கழலை வீக்கி, காம வெகுளி மயக்கங்களை யொழித்தலென்னும் யானையைக் கடிதாக மேற்கொண்டு, சர்வசங்க நிவர்த்திவந்து நிர்ப்பயமானமையால் துணை வேண்டாமை என்னும் படைத்துணையையும் உடையரான அவ்விடத்து, கூர்மையையும் புகரையும் உடைத்தாகிய ஞானமென்னும் வாளை எடுத்துக்கொண்டு, பஞ்சேந்திரியங்களைத் தம் வசமாக்கிக் காமாதி பகை ஆறையும் ஒட்டி, புண்ணிய பாவங்களைச் செயித்து, பரமசிவனே பரதத்துவமென்னும் ஒரு நெறிப்பட்ட அறிவொன்றேயல்லாமல் அல்லாத உணர்வுகளைக் கெடுத்து, அறிவோர் அறிவின்பாலாய் அறிந்து அனுபவிக்கத் தக்கதாம்.

புட்பங்களைப் புடையாக வைத்து அஞ்செழுத்தாகிய மலர்களைத் தொடுத்து, அன்பிற் பிணிப்புறும் வண்ணம் சிவபிரானுக்குச் சாத்துதலாகும்.

"எந்தையா ராலயத்தி னிடையினொரு புடைமருவிச்
சிந்தையா னதுதெளியத் திரும்பவும்பன் மலரெல்லாம்
வந்ததொரு பழுதெனப்பார்த் துணர்ந்துமன நாரினுடன்
முந்தமுந்த வகிர்ந்தகர நார்கொடுப்பன் முறைபிணியா"

"படாழி சூழ்கிடந்த பார்விசும்பு மகழ்ந்துபறந்
திடாழி குளித்துடல மிளைப்பதல்லா லிருவரின்னுந்
தொடாரத பரஞ்சுடரைத் தொடராகத் தொடருதற்குத்
தொடாரக வணிந்துபவந் தொடராதபடி யளிப்பார்"

—கரு. புரா. எறிபத்தச்சருக்கம். 16, 17.

"அன்பு நாரா வஞ்செழுத்து நெஞ்சுதொடுக்க வலர்தொடுத்தே
யென்புள்ளுருகு மடியாரைத் தொழுது நீங்கி"

—(ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணம். 226.)

"அண்ணலா ரடிகண் மறக்கினுநாம வஞ்செழுத் தறியவெப் பொழுது
மெண்ணிய நாவே யின்சுவை பெருக விடையறு தியம்புமென் றித [னைத்
திண்ணிய வுணர்விற் கொள்பவர் மற்றுப் பற்றிலே னெனச்செழுந் [தமிழா
னண்ணிய வன்பிற் பிணிப்புற நவின்றார் நமச்சிவா யத்திருப் பதிகம்"

—ஏயர்கோன் கலிக்காம நாயனர் புராணம்-87.

இனத்தன்மையுள்ள பொருள்களே ஒன்று சேரத்தக்கன. "ஞானமாம் மணநிறை மோனமா மலரே" எனத் திருக்கழுமல மும்மணிக்கோவை 16-ல் சிவபிரான் மலரெனப் பெறுவதால் அவர் அணியும் பொருள்களில் மலரே சிறப்புடைய தெனக்கொண்டு, அவர் அருளைப்பெற விரும்பினோர் அவருக்கு மலர்மாலை சாத்துவதியல்பென்பது ஈண்டு உய்த்துணரத் தக்கது.

### 2. யானை பூடலையைப்பற்றிப் புட்பங்களைச் சிதறிய தென்பது ஆணவமானது மனதைப்பற்றி அருள்மயமான அஹிம்சாதிகளைச் சிதறடித்தலெனல்.

யானையானது களிமயக்குற்று, காலகதியால் பாகரை மீறி, சிவகாமியாண்டார் கரத்திலிருந்த புட்பக் குடலையைப் பறித்துப் புட்பங்களைச் சிதறடித்ததானது, ஆணவமானது

தனது வலியழியுங் காலகதியால் மேலிட்டு, தியானிக்கும் சீவனின் மனதைப் பறித்து அதிலுள்ள அருண்மயமான அஹிம்சாதி புட்பங்களைச் சிதறடித்ததாகும். மடியப்போகுமிருள் விடிவதற்கு முற்போதில் மிகுதலைப்போலவும், அணையப் போகுந் தீபம் சுடர்விட்டொளிர்வதைப் போலவும் தனது வலிகெடப்போகும் ஆணவமானது மேலிட்டது.

"கருவி கரணங் கழன்றுங் கழலா
விருளின் பெருமையிது வென்னே—விருடான்
விடிகைக் கிருண்ட மிகுதிபோன் மாசு
மடிகைக் கிருண்டதுகாண் மற்று."

—துகளறுபோதம் 23.

### 3. சிவகாமியாண்டார் செயலின்மையானது சீவனின் செயலின்மை யாகுமெனல்.

அங்ஙனம் புட்பங்களைச் சிதறிய யானையைக் கொல்லச் சீற்றமிக் குடையராய்ச் சிவகாமியாண்டார் தொடர்ந்தபோது யானையானது செருக்குடன் வேகமாய்ச் செல்ல, அதை அணுகமாட்டாதவராய்த் தமது செயலின்மையால் தளர்ந்து நின்றதானது, மனதைப் பறித்து அஹிம்சாதி புட்பங்களைச் சிதறிய ஆணவத்தை அடக்க முயற்சித்தும், ஆணவமானது மேலிட்டுத் தன் வசப்படாதிருப்பதைக் கண்ட சீவன், தனது செயலின்மையால் தளர்ந்து நின்றதாகும்.

"அப்பொழு தணைய வொட்டா தடற்களி றகன்று போக"

பெரி. புரா. எறி. புரா. 15.

"சேட்படக் கண்ட தொண்டர்பின் றொடருஞ்
செயலிலராய் விழுந்து" —கரு. புரா. எறி. சரு. 30.

"குறியிலன் கர்த்தாவல்லன்"— சிவ. ஞா. சித். 4-ம் சூத். 38.

"சுதந்தரமிலியிவ் னவன் சுதந்தரனே."

—சத்தியஞான போதம்-உபதேசவியல்-19.

### 4. சிவகாமியாண்டார் வருந்துவது சீவன் வருந்துவதாகு மெனல்.

மூப்பால் தளர்வுற்று நின்ற சிவகாமியாண்டார், தமக்கு ஊறு விளைத்துத் தம்மைக் கடந்த யானையின் செருக்கை அட

க்கும்படித் திருவருளைப் பிரார்த்தித்துச் "சிவதா, சிவதா" எனப் புலம்பியதானது சீவனுனது தனது செயலின்மையை யுணர்ந்து, தன்னை மீறிய ஆணவத்தினது வலியை யழித்துத் தனக்குச் சுகத்தைக் கொடுக்கும்படிச் சிவபிரானைப் பிரார்த்தித்து இரங்குதலாகும்.

"அப்பொழு தனைய வொட்டா தடற்களி றகன்று போக
மெய்ப்பெருந் தொண்டர் மூப்பால் விரைந்து பின்செல்லமாட்டார்
தப்பினர் விழுந்து கையா றறையடித் தெழுந்து நின்று
செப்பருந் துயரநீடிச் செயிர்த்துமுன் சிவதா வென்பார்."

"களியா னையினீ ருரியாய் சிவதா, எளியார் வலியா மிறைவா சிவதா
வளியா ரடியா ரற்வே சிவதா, தெளிவா ரமுதே சிவதா சிவதா.

ஆறும் மதியும் மணியுஞ் சடைமே, லேறும் மலரைக் கரிசிந் துவதே
வேறுண் ணினைவார் புரம்வெந் தவியச், சீறுஞ் சிலையாய் சிவதா சிவதா

தஞ்சே சரணம் புகுதுந் தமியோர், நெஞ்சேய் துயரங் கெடநேர் தொடரு
மஞ்சே யெனவீழ் மறலிக் கிறைநீள், செஞ்சே வடியாய் சிவதா சிவதா

நெடியோ னறியா நெறியா ரறியும், படியா லடிமைப் பணிசெய் தொழுகு
மடியார் களில்யா னுரா வணைவாய், முடியா முதலா யெனவே
மொழிய." —பெரி. புரா. எறி. புரா. 15—19.

## 5. உற்றிடத்துதவலாவது பக்குவத்திலுதவலெனல்,

"உற்றிடத்துதவு நீரார்" என எறிபத்தநாயனுரைச் சிறப்பித்து அருண்மொழித்தேவ ரருளிச் செய்ததனுலே, உற்றிடத்துதவலாவது தருணங் கண்டவிடத்து உதவுதலாம்; எனவே பக்குவங்கண்ட விடத்து உதவுதலாகும்.

"பக்குவங்கண் டறிவிக்கும் பான்மையே மியாம்"
தாயுமானுர்-ஆகாரபுவனம்-18.

"பத்தருக் கெய்ப்பினில் வைப்பென உதவும்
முத்தித் தாள்" —திருவிடைமருதூர் மும்மணிக்கோவை-7.

"இருவினை யொப்பா விருண்மல பாகம்
மலபா கத்தின் மருவும் பாதம்
பாதப்ப திவாற் பயிலுங் குரவன்
குரவன் வாலுங் கொடும்பவ மேழுந்
தனித்தனி யோடுந் தலைகெட் டன்றே."
—சத்தியஞானபோதம் பாசவியல் 24.

"இந்த முறையிலிவ ளேனற் புனங்காப்ப
வந்த வளவி லவளுக் கருள்புரியக்
கந்தவரை நீங்கிக் கதிர்வே லவன்றனியே
வந்து தணிகை மலையிடத்து வைகினனே."

—கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப் படலம் 55.

"திருத்தணிகையி லமர்ந்தான் குமரநாதன்
திருத்தணிகையி லமர்ந்தான்.

சரணம்.

இனித்தாமதஞ்செய்யலா காதென்றின்னருள் கூர்ந்து
இசையும்விமானமிசை விஜயங்கொண்டுளமோர்ந்து.

(திருத்தணிகை)

—கந்தபுராணக் கீர்த்தனம் தேவகாண்டம் கீர்த். 22.

## 6. எறிபத்த நாயனூர் யானையைத்தடிய மேற்செல்வது, ஞானுசாரியர் ஆணவத்தை யழிக்க மேலிடுவதாகு மெனல்.

இவ்வாறு சிவகாமியாண்டார் புலம்பியதைக் கேட்ட எறிபத்த நாயனூர் உற்றதை யறிந்து, வலிமிகுந்த யானையைத் தடிய, தாமாகவே அதனை யணுகி, ஆர்த்து, காலினுற் குலுங் கப் பாய்ந்ததானது சீவன் பிரார்த்தித்து இரங்கியதை அறிந்த ஞானுசாரியர் கருணையினுற் ருமாகவே, சீவனின் வலியைக் கடந்த மிகுந்த வலிமையையுடைய ஆணவத்தைத் தடிய யோக நெறியால் சரீரமானது கம்பிக்கும்படி மேலிடுதலாகும்.

"கண்டவ ரிதுமுன் பண்ண லுரித்தவக் களிறே போலு
மண்டரு மண்ணு ளோருந் தடுக்கினு மடர்த்துச் சிந்தத்
துண்டித்துக் கொல்வே னென்று சுடர்மழு வலத்தில் வீசிக்
கொண்டெழுந் தார்த்துச் சென்று காலினுற் குலுங்கப்பாய்ந்தார்.

பெ. புரா., எறி. புரா. 23.

"நோக்கான் மாயை, பரிசத்தா னுண்மைவினை, மந்திரச் சொல்லாற்
ரூக்குஞ் சுத்த மாயையது, தியானந் தன்னுற் சாருமலம்
பார்க்குமிகு பாவனையா லேபகைத்த திரோதம், யோகத்தாற்
றேக்கு மான்ம போத, மிவை சோக்கழலுங் கண்டீரே.

தியானத்தாலே ஆணவமானது அழிக்கப்படுமாதலால், யோகத்தின் முடிவில் கூடுவதாகிய தியானத்தைக் குறிப்பிடவே யோகநெறி இவ்விடத்தில் கூறப்பட்டது.

### 7. யானையினது துதிக்கையை அறுத்ததானது ஆணவத்தின் கரத்தை (வலியை) அறுத்ததாகு மெனல்.

யானையைத்தடிய மேலிட்ட எறிபத்த நாயனர், யானையின் சிரத்தைத் துண்டியாது அதன் துதிக்கையைத் துண்டித்ததும், அதனுல் அந்த யானையானது செயலற்றுப் பொன்றியது மானது, ஆணவத்தை யழிக்க மேலிட்ட ஞானசாரியர் ஆணவமானது நித்தமாகையால் அதை யழிக்காது, அதனது மறைக்குஞ் சத்தியை அறுத்ததும் அதனுல் (அந்தச் சீவனினிடத்தில் மட்டும்) ஆணவம் அழிந்ததாகும். இவ்விடத்தில் அழிவென்றது சத்திகேட்டையே யாகும்.

பாய்தலும் விசைகொண் டுய்க்கும் பாகரைக் கொண்டு சீறிக்
காய்தழ லுமிழ்கண் வேழந் திரிந்துமேற் கதுவ வச்சந்
தாய்தலை யன்பின் முன்பு நிற்குமே தகைந்து பாய்ந்து
தோய்தனித் தடக்கைவீழ மழுவினுற் றுணித்தார் தொண்டர்

கையினைத் துணித்த போது கடலெனக் கதறி வீழ்ந்து
மைவரை யனைய வேழம் புரண்டிட''

—பெ. புரா. எறி. புரா. 24—25.

இவ்விடத்தில் யானை யிறந்ததாகக் கூறப்படாமையானது உய்த்துணரத்தக்கது.

"அழிந்திடும் பாசமென்னி னித்தமென் றுரைத்தல் வேண்டா
வழிந்திடா தென்னின் ஞான மடைவது கருத வேண்டா
வழிந்திடுஞ் சத்தி நித்த மழிந்திடா வொளியின் முன்ன
ரழிந்திடு மிருளு நாச மடைந்திடா மிடைந்திடாவே.

—சிவப்பிரகாசம் 88.

### 8. பாகரும் பரிக்காரருமிறந்தது. வினைகளும் மாயைகளும் அழிந்த தாகுமெனல்.

யானையானது தனது கரத்தை யிழந்து புரளவே, அதன் மேலிருந்த பாகரிருவரையும், அதன் மருங்கு வந்த பரிக்காரர் மூவரையும் கொன்றதானது, ஆணவத்தின் சத்தியை அழித்தவுடனே, அதை ஆதாரமாகச் சார்ந்த இருவினைகளையும்,

மூன்று மாயைகளையும் அழித்ததாகும். மாயைகளழிவெய்தவே மாயேயங்களும் அழிவெய்து மென்பது கூறுமலேயமையும்.

> "கையினைத் துணித்த போது கடலெனக் கதறி வீழ்ந்து
> மைவரை யனைய வேழம் புரண்டிட மருங்கு வந்த
> வெய்யகோற் பாகர் மூவர் மிசைகொண்டா ரிருவ ராக
> வைவரைக் கொன்று நின்றா ரருவரை யனைய தோளார்."
>
> —பெ. புரா. எறி. புரா. 25.

## 9. அரசன் படுகளத்தை அடைந்தது, திரோதான சத்தி சுழிமுனையை அடைந்த தாகுமெனல்.

தனது ஆட்சிக்கு முக்கிய அங்கமாகிய யானையும், பாகர் முதலியவர்களும் அழிக்கப்பட்டமையை அறிந்த அரசன், படுகளத்தை அடைந்த தானது, திரோதான சத்தியானது தனது ஆட்சிக்கு முக்கிய அங்கமான ஆணவமும் கன்மமும், மாயை மாயேயங்களும் அழிக்கப்பட்டமையை அறிந்து ஆவடுதுறையாகிய சுழிமுனையை அடைந்ததாகும். படுகளம் என்பது அடுதுறை யெனப்பட்டு, சீவனை (ஆவை) அடுதுறை எனப் பொருள் தருவதால் ஆக்களெனும் பசுக்களின் போதத்தை அடுகின்ற இடமாகிய சுழுமுனையாகும்.

> "கடுவிசை முடுகிப் போகிக் களிற்றொடும் பாகர் வீழ்ந்த
> படுகளங் குறுகச் சென்றான்". —பெரி. புரா. எறி. புரா. 34.

> "ஆக்களெனு முயிர்ப்போத மடுவது நந்துறை யென்றே
> நீக்கரிய தண்டுறையே நின்குடியாக் கொண்டனையே"
>
> —சிவஞான முனிவர் துதி.

"போக்கு வரவறிந் துயிர்புறம் போகாமற் புறவாச லொன்பதையும் பூட்டி நன்றாய்—நாக்கு நுனிமேலேத்தி முச்சந்தி தன்னில் நாதவிந்து நடுநிறுத்தில் ஞானவாசல்—தாக்குமது மேலேறி வெளியிற் சென்றால் சண்முகமுந் தோணுமப்பா விட்ட குறைதானுந்—தாக்குமது திருவாவடு துறையைப் பார்க்கில் சூரியனுஞ் சந்திரனுந் தோற்றமாமே."
—துறையறி விளக்கம் (எட்டுப்பிரதி).

## 10. அரசன் எறிபத்த நாயனாரை வணங்கியது, திரோதான சத்தியானது சிவபிரானின் வேறாகாத ஞானாசாரியரை வணங்கியதாகு மெனல்.

படுகளத்தை அடைந்த அரசன், யானையையும் பாகர் முதலியவர்களையும் கொன்றவர் எறிபத்த நாயனாரென வறிந்து, உடனே அவர் சிவனடியாராகையால் ஏற்ற குற்ற

மில்லாது தண்டிக்கமாட்டா ரென்றெண்ணி, அவரைப் பணிந்து குடிகள் செய்தது அரசன் செய்ததேயாகையால், யானையும் பாகர் முதலியவர்களும் செய்த குற்றத்திற்கு அடியேனும் கடமைப்பட்டவனாகையால், அடியேனையும் தண்டிக்க வேண்டுமென்று பிரார்த்தித்ததானது ஆவடுதுறையாகிய சுழிமுனையை அடைந்த திரோதான சத்தியானது அவ்விடத்தில் ஆணவம் முதலிய மலங்களை அழித்தவர் சிவபிரானின் வேறாகாத ஞானாசாரிய ரெனவறிந்து அவரைச் சிவனெனவே கண்டு மலங்களை அழித்ததானது அருட்செயலாகுமெனத் துணிந்து அவ்வாசாரியரை யணுகி மலங்களின் கொடிய செயல்களுக்குத் தானுங் காரணமாயிருத்தலால், தன்னையும் அழிக்கும்படிப் பிரார்த்தித்ததாகும்.

"கடுவிசை முடுகிப் போகிக் களிற்றொடும் பாகர் வீழ்ந்த
படுகளங் குறுகச் சென்றான் பகைப்புலத் தவரைக் காணான்
விடுசுடர் மழுவொன் றேந்தி வேறிரு தடக்கைத் தாய
வடுகளி றென்ன நின்ற வன்பரை முன்பு கண்டான்.

பொன்றவ ழருவிக் குன்ற மெனப்புரள் களிற்றின் முன்பு
நின்றவர் மன்று ளென்று நிருத்தமே பயிலும் வெள்ளிக்
குன்றவ ரடியா ரானார் கொன்றவ ரிவரென் றோரான்
வென்றவர் யாவ ரென்றான் வெடிபட முழங்குஞ் சொல்லான்.

அரசனுங் கருளிச் செய்ய வருகுசென் றணைந்து பாகர்
விரைசெய்தார் மாலை யோய்நின் விறற்களிற் றெதிரே நிற்குந்
திரைசெய்நீ ருலகின் மன்னர் யாருளார் தீங்கு செய்தார்
பரசுமுன் கொண்டு நின்ற விவரெனப் பணிந்து சொன்னார்.

குழையணி காதி னானுக் கன்பராங் குணத்தின் மிக்கார்
பிழைபடி னன்றிக் கொல்லார் பிழைத்தது ண்டென்றுட் கொண்டு
மழைமத யானை சேனை வரவினை மாற்றி மற்ற
வுழைவயப் புரவி மேனின் றிழிந்தன னுலக மன்னன்.

செறிந்தவர் தம்மை நீக்கி யன்பர்முன் றொழுது சென்றீ
தறிந்திலே னடியே னங்குக் கேட்டதொன் றதுதா னிற்க
மறிந்தவிக் களிற்றின் குற்றம் பாகரோ டிதனை மாள
வெறிந்ததே போது மோதா னருள்செய்யு மென்று நின்றார்.



113901

மன்னவன் றன்னை நோக்கி வானவ ரீசர் நேசர்
சென்னியித் துங்க வேழஞ் சிவகாமி யாண்டார் கொய்து
பன்னகா பரணர்ச் சாத்தக் கொடுவரும் பள்ளித் தாமந்
தன்னைமுன் பறித்துச் சிந்தத் தரைப்படத் துணித்து வீழ்த்தேன்.

மாதங்கந் தீங்கு செய்ய வருபரிக் காரர் தாமு
மீதங்குக் கடாவு வாரும் விலக்கிடா தொழிந்து பட்டா
ரீதிங்கு நிகழ்ந்த தென்று றெறிபத்த ரென்ன வஞ்சிப்
பாதங்கண் முறையாற் றூழ்ந்து பருவரைத் தடந்தோண் மன்னன்.

அங்கண ரடியார் தம்மைச் செய்தவிவ் வபரா தத்துக்
கிங்கிது தன்னுற் போதா தென்னையுங் கொல்ல வேண்டு
மங்கல மழுவாற் கொல்கை வழக்குமன் றிதுவா மென்று
செங்கையா லுடைவாள் வாங்கிக் கொடுத்தனர் தீர்வு நேர்வார்.

பெ. புரா., எறி. புரா. 34—42.

சினவிடைப் பாக னடியரை யிழைத்த தீமையிப் பரிசினுற் றீரா
வினையவித் தீமைக் குரியன்யா னன்றே வெனையுமிக் களத்
திடைக் கோறல்
பனவநல் வழக்கீ தடுவதற் குனது பரசுதிப் பியப்படை படுதற்
கனையமா தவஞ்செய் தேனிலே னிதனு லடுதியென் றங்கைவாட்
கொடுத்தார். —கரு. புரா., எறிபத்தச் சருக்கம் 58.

## 11. எறிபத்த நாயனுர் வருந்துவது ஞானுசாரியர் வருந்துவதாகுமெனல்.

அங்ஙனம் பிரார்த்தித்த அரசனின் தன்மையை அறிந்த எறிபத்த நாயனுர், தனது கடமையை யறிந்த உத்தமனுகும் அரசன் வருந்தும்படி நேர்ந்தமையை யெண்ணி வருந்தியதானது, அவ்விடத்தில் தமக்கெதிரே தோன்றுவது திரோதான சத்தியென ஞானுசாரியார் அறிந்து, தனக்கு அனன்னியமாயுள்ள இறைவன தாணையைச் செலுத்தும் (திரோதான) சத்தி வருந்தும்படி நேர்ந்தமையைப்பற்றித் தாமும் வருந்தியதாகும்.

"வன்பெருங் களிறு பாகர் மடியவு முடைவா ளைத்தந்
தென்பெரும் பிழையி னுலே யென்னையுங் கொல்லு மென்னு
மன்பனுர் தமக்குத் தீங்கு நினைத்தன னென்று கொண்டு
முன்பென துயிர் செகுத்து முடிப்பதே முடிவென் றெண்ணி.
—பெ. புரா., எறி. புரா. 45.

### 12. இறந்தவர்கள் அருள்வாக்கால் எழுந்து அன்புமயமானது, மலங்களைந்தும் பிரகாசமுடையனவாகி அருள்மயமாதலாகுமெனல்.

தன்னையும் கொல்லவேண்டுமெனப் பிரார்த்தித்த அரசனது அன்பை வியந்து, அவ்வுத்தமனது மனம் நோக நேர்ந்ததே யென வருந்தித் தமது உயிரைவிடத் துணிந்த எறிபத்த நாயனரை அரசன் தடுத்துப் பிடிக்க, அப்போது தொண்டர்களது அன்புத்திறத்தை உலகறியச் செய்யவே, இறைவனருளால் இவ்வாறு நிகழ்ந்ததென அறிவித்த அருள்வாக்கைக் கேட்டு இருவரும் திருவருளைப் புகழ்ந்து மகிழ்ந்தார்கள். உடனே சிவகாமியாண்டாரது புட்பக் குடலையில் புட்பங்கள் நிறைந் திருப்பதையும், உறங்கி விழித்தவர்களைப் போல யானையும் பாகரும் பரிக்காரரும் உயிர்பெற்றெழுந்து அன்பு மேலிட்டு வருவதையும், சிவகாமியாண்டாரும் மிகுந்த களிப்போடு திருவருளைப் புகழ்ந்து அன்புருவாயிருப்பதையுங் கண்டார்கள் என்பது, தன்னையுந் தண்டிக்கும்படிப் பிரார்த்தித்த திரோதான சத்தியை வியந்து, அவ்வுத்தம சத்தியின் மனது நோக நேர்ந்ததேயென வருந்தித் தம்மைத் துறக்கக்கருதிய ஞானசாரியரது நிலையையும் அவரது அருட்டிறத்தையுங் கண்டு, திரோதான சத்தியானது தனதருள் வலியால் ஞானசாரியரைத் தடுக்க, அப்போது உயிர்களது அன்புத் திறத்தையும் அவர்களை ஆட்கொள்ளும் முறைமையையும் உலகறியச் செய்யவே இவ்வாறு நிகழ்ந்ததென்று திருவருளாலுணர்ந்து இருவரும் திருவருளைப் புகழ்ந்தார்கள். அப்போது சீவனது மனதில் உத்தம தெய்வீகமான அஹிம்சாதிகளாகிய அருண்மயமான புட்பங்கள் நிறையப் பெற்றதையும், ஆணவம், கன்மம், மாயை, மாயேயங்கள் தங்களுக்கு முன்னிருந்த மறைக்குந் தன்மைகெட்டு, பிரகாசமுடையனவாகி, அருள்மயமாய் மாறிவருவதையும், சீவனனது அருண்மயமாய்ப் பரவசப் பட்டதையும் அவ்விருவரும் கண்டார்கள் என்பதாம்.

"புரிந்தவர் கொடுத்த வாளை யன்பர்தங் கழுத்திற் பூட்டி
யறிந்திட லுற்ற போதி லரசனும் பெரியோர் செய்கை
யிருந்தவா றிதுவென் கெட்டே னென்றெதிர் கடிதிற் சென்று
பெருந்தடந் தோளாற் கூடிப் பிடித்தனன் வாளுங் கையும்.

வளவனர் விடாது பற்ற மாதவர் வருந்து கின்ற
வளவிலாப் பரிவில் வந்த விடுக்கணை யகற்ற வேண்டிக்
களமணி களத்துச் செய்ய கண்ணுத லருளால் வாக்குக்
கிளரொளி விசும்பின் மேல்வந் தெழுந்தது பலருங் கேட்ப.

தொழுந்தகை யன்பின் மிக்கார் தொண்டினை மண்மேற் காட்டச்
செழுந்திரு மலரை யின்று சினக்கரி சிந்தத் திங்கட்
கொழுந்தணி வேணிக் கூத்த ரருளினுற் கூடிற் றென்றங்
கெழுந்தது பாகரோடு மியானையு மெழுந்த தன்றே.

ஈரவே பூட்டும் வாள்விட் டெறிபத்தர் தாமு மந்த
நேரியர் பெருமான் முண்மேல் விழுந்தனர் நிருபர் கோனும்
போர்வடி வாளைப் போக வெறிந்தவர் கழல்கள் பற்றிப்
பார்மிசைப் பணிந்தார் விண்ணேர் பனிமலர் மாரி தூர்த்தார்.

இருவரு மெழுந்து வானி லெழுந்தபே ரொலியைப் போற்ற
வருமறைப் பொருளா யுள்ளா ரணிகொள்பூங் கூடை தன்னின்
மருவிய பள்ளித் தாம நிறைந்திட வருள மற்றத்
திருவருள் கண்டு வாழ்ந்து சிவகாமி யாரு நின்ருர்.

மட்டவி ழலங்கல் வென்றி மன்னவர் பெருமான் முன்ன
ருட்டரு களிப்பி னேடு முறங்கிமீ தெழுந்த தொத்து
முட்டவெங் கடங்கள் பாய்ந்து முகிலென முழங்கிப் பொங்கும்
பட்டவர்த் தனத்தைக் கொண்டு பாகரு மணைய வந்தார்.''

—பெ. புரா., எறி. நா. புரா. 46—51.

கீர்த்தனம் - இராகம் திலகரி - சாபு தாளம்.

(பல்லவி)

எழுந்ததே யொருவாக்குப் பலருங் கேட்க (எழுந்த)

(அநுபல்லவி)

செழுந்திரு மழுவினல் அழிந்துடல் விழுந்திடச்
செத்தபாக ரொடும் அத்தியும் எழுந்திட (எழுந்த)

சரணங்கள்.

1. சங்கரரைப்பணியும் உங்கள் அன்பைச்
சகத்தில் விளக்கிடத் திங்கள் சூடும்

துங்கராருளால்மல ரிங்குவிழச் சினத்தில்
துன்னியானை செய்த தென்னவே ககனத்தில் (எழுந்த)

2. களத்திற் பூட்டியவாளை யெறிந்துதொண்டர்
காவலரைப் பணிந்தார் செறிந்து அவரும்

உளத்தன்பொடும் பணியக் களித்தனைவரும்பார்க்க
உம்பர் பொழியுமலர் அம்புவியினைப் போர்க்க (எழுந்த)

3. இருவரும் விண்ணினி லெழுந்தவாக்கை
இறைஞ்சி யின்பக்கடலி லழுந்த ஈசன்
அருளினற் சிவகாமி யார்குடலை திகழ
அருமலர் நிறைந்திட அவருங்கண்டு புகழ (எழுந்த)

4. தூயபுகழ்ச் சோழர் முன்னம் அங்கே
தூங்கியெழுந் தாற்போற் கன்னம் தன்னில்
பாயுமதத்தோடிடி போல்முழக்கம் வழங்கிப்
பட்டவர்த் தனத்தொடு பாகர்வர முழங்கி (எழுந்த)

—எறிபத்த நாயனர் புராணக் கீர்த்தனம்—6.

## 13. அரசன் அன்புமயமாய் அரசு செலுத்துவது திரோதானசத்தி அருண்மயமாய் மலங்களைச் செலுத்துவதாகுமெனல்.

இவ்வாறு அரசனும் எறிபத்த நாயனரும் திருவருட் செயலைக்கண்டு திருவருளை வாழ்த்தியபின், அரசனதடிகளில் வணங்கிய யானை பாகர் பரிக்காரர்களைக்கண்ட எறிபத்தநாயனர், அரசனை யானைமீதேறிச் சென்று தனது அரசாட்சியை நடத்தும்படிப் பிரார்த்திக்க, அரசனும் எறிபத்தநாயனரை வணங்கி அவரது ஆணைக்கு அஞ்சி, அவ்வாறே யானைமீதேறிச் சென்று, அன்புமயமாய்த் தனது அரசாட்சியைச் செலுத்தியதானது, திரோதானசத்தியும் ஞானசாரியரும் இவ்வாறு நிகழ்ந்தது திருவருளாணை யெனக் கண்டு திருவருளை வாழ்த்திய பின் திரோதான சத்தியாகிய அருட்சத்தியின் பாதத்தில் அடங்கிய ஆணவம் கன்மம் மாயை மாயேயங்களைக் கண்ட ஞானசாரியர், திரோதான சத்தியாகிய அருட்சத்தியை நோக்கி ஆணவத்தைச் செலுத்தித் தனது ஆட்சியையும் நடத்தும்படிப் பிரார்த்திக்க, அருட்சத்தியும் சிவபிரானின் வேறாகாத ஞானசாரியரை வணங்கி, அவருடைய ஆணைக்கு அஞ்சி, ஆணவத்தைச் செலுத்தி அருண்மயமாய்த் தனது ஆட்சியை நடத்துவதாகும்.

"ஆனசீர்த் தொண்டர் கும்பிட் டடியனேன் களிப்ப விந்த
மானவெங் களிற்றை யேறி மகிழ்ந்தெழுந் தருளு மென்ன
மேன்மையப் பணிமேற்கொண்டு வணங்கிவெண் குடையி னீழல்
யானைமேல் கொண்டு சென்று ரிவுளிமேற் கொண்டு வந்தார்.

அங்கிலே யெழுந்த சேனை யார்கலி யேழு மொன்றாய்
மன்னிய வொலியி னார்ப்ப மண்ணெலா மகிழ்ந்து வாழ்த்தப்
பொன்னெடும் பொதுவி லாட னீடிய புனிதர் பொற்றாள்
சென்னியிற் கொண்டு சென்னி திருவளர் கோயில் புக்கான்.

—பெ. புரா., எறி புரா. 52, 53.

**14. சிவகாமியாண்டார் தமதாயுள் பரியந்தம் சிவப் பணியை யியற்றிச் சிவனடியாராக விளங்கினாரென்பது சீவனானது தனது தேகாந்தம் வரையில் தியானபரனா யிருந்தே சீவன்முத்தனாய் விளங்கிய தாகுமெனல்.**

எறிபத்த நாயனார் வாயிலாகத் தம்மை ஆட்கொண்டு, தமக்குச் சிவபிரான் அநுக்கிரகித்த முறைமையைச் சிவகாமி யாண்டார் கண்டு; ஆனந்த பரவசமாய்த் தமது கடமையில் தவிராது, வழக்கத்தைப் போலவே சிவப்பணிவிடையைத் தமது தேகாந்தம் வரையில் இயற்றிச் சிவனடியாராக விளங் கினாரென்பது, ஞாஞ்சாரியர் வாயிலாகத் தன்னை ஆட் கொண்டு, தனக்குச் சிவபிரான் அநுக்கிரகித்த முறைமை யைச் சீவனானதுகண்டு, ஆனந்த பரவசனாய்த் தனது கடமை யில் தவிராது தனது தேகாந்தம் வரையில் தியானபரனா யிருந்தே சீவன் முத்தனாய் விளங்கியதாகும்.

குறிப்பு:— சிவனடியாருக்குத் தேகாந்தத்தில் சிவபதம் சித்திப்பது கூறாமலே அமைவதைப்போல, சீவன்முத்தனுக் குத் தேகநீக்கத்தில், சிவபரஞ்சுடரிடத்தில் இரண்டறக் கலந்து சிவானந்தத்தைமட்டும் அநுபவித்திருத்தலாகும் சித் தாந்த முத்தியாகிய **பரமுத்தி** சித்திப்பது கூறாமலே அமையும்.

"தம்பிரான் பணிமேற் கொண்டு சிவகாமியாருஞ் சார"

—பெரி. புரா., எறி. புரா, 54.

"பராஞானத் தாற்பரத்தைத் தெரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞான மஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞானம் வயிந்தவத்தின் கலக்கந்
தருஞானம் போகஞா திருஞான ஞேயந்
தங்கியஞா னஞ்சங்கற் பனைஞான மாகுந்
திருஞான மிவையெல்லாங் கடந்தசிவ ஞான
மாதலாற் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்.

செம்பிரத குளிகையினாற் களிம்பற்றுப் பொன்னாய்ச்
செம்பொனுடன் சேருமலஞ் சிதைந்தாற் சீவ
னம்பனுடன் கூடுமெனிற் பொன்போ லல்ல
னற்குளிகை போலவா னணுகுமலம் போக்கி
யம்பொனடிக் கீழ்வைப்ப னருங்களங்க மறுக்கு
மக்குளிகை தானும்பொன் னாகா தாகு
மும்பர்பிரா னுற்பத்தி யாதிகளுக் குரிய
னுயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே.

இரும்பைக்காந் தம்வலித்தாற் போலியைந்தங் குயிரை
யெரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத்தா னாக்கி
யரும்பித்திந் தனத்தையன லழிப்பதுபோன் மலத்தை
யறுத்தமல னப்பணைந்த வுப்பேபோ லணைந்து
விரும்பிப்பொன் னினைக்குளிகை யொளிப்பதுபோ லடக்கி
மேலளித்துத் தானெல்லாம் வேதிப்பா னாகிக்
கரும்பைத்தே னைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியையொத் திருப்பனந்த முத்தியினிற் கலந்தே.

—சி. ஞா. சி. சு. பக்கம் 11-ம் சூ. 2, 10, 12.

தனக்கமைத்த நாண்முழுதுந் தான்புரியும் படைப்பியற்றி
மனக்கினிய பெருமானா ருபதேச மறவானாய்ச்
சினக்கடுமை முதலொழிந்த சீவன்முத்த னாயீற்றிற்
கனக்கருங்கண் டனைக்கூடிப் பரமுத்தனாய்க் களித்தான்.

அருளினெமை யுந்தனையு மறிந்தவுயிர் கதிரொடுகண்
ணணைந்தாற் போலத்
தெருளினெம துள்ளடங்கி யானந்த மொன்றுமே
திளையா நிற்கு
மருளில்யான் முதலென்ற லருளின்யான் முதலென்றன்
மாறி மாறும்
பொருளினருண் முதலென்ற லதிலழுந்த றவிர்ந்தெம்மைப்
புணர்தன் முத்தி

முன்னமே யழிந்ததுசஞ் சிதமேறு வினையுளதேன்
முற்றா தாகுஞ்
சொன்னவா றருளினான் வாதனைமெய் யியங்களவுந்
தோன்றா நிற்கு
மன்னதுமஞ் செழுத்தைவிதிப் படிகணிக்கப் போகமையா
லயமுன் மூன்றிற்
பின்னமற வழிபடுதல் சீவன்முத்தி பரமுத்திப்
பேறு மீண்டே.

—திருப்பெருந்துறைப் புராணம், பிரமனுபதேசப் படலம் 32, 67, 68.

## 15. எறிபத்த நாயனார் சிவகணத் தலைவரானது ஞானாசாரியர் சிவனடித் தொண்டை விரும்பிய சீவர்களுக்குத் தலைவரானதாகுமெனல்.

எறிபத்த நாயனார் இவ்வாறே சிவனடியாருக்கு உதவி செய்துகொண்டிருந்து சிவாக்கினையாலே சிவகணங்களுக்கு முதற் பெருந்தலைவரானா ரென்பது, ஞானாசாரியர், இவ்வாறு சிவனடித் தொண்டை விரும்பிய பக்குவான்மாக்களுக்கு அநுக்கிரகித்துக் கொண்டிருந்து சிவாக்கினையினாலே சிவதாகமுள்ள சீவர்களுக்குத் தலைவராய் விளங்கினா ரென்பதாம்.

"எம்பிரா னன்ப ரான வெறிபத்தர் தாமு மென்னே
யம்பல நிறைந்தார் தொண்ட ரறிவதற் கரியா ரென்று
செம்பியன் பெருமை யுன்னித் திருப்பணி நோக்கிச் சென்றார்.

மற்றவ ரினைய தான வன்பெருந் தொண்டு மண்மே
லுற்றிடத் தடியார் முன்சென் றுதவியே நாளு நாளு
நற்றவக் கொள்கை தாங்கி நலமிகு கயிலை வெற்பிற்
கொற்றவர் கணத்தின் முன்னாங் கோமுதற் றலைமை பெற்றார்"

—பெரி. புரா., எறி. புராணம் 54, 55.

"அன்பு மிகவுண்டாய் அதிலேவி வேகமுண்டாய்த்
துன்ப வினையைத் துடைப்பதுண்டா—யின்பந்
தரும்பூ ரணத்துக்கே தாகமுண்டா யோடி
வருங்கா ரணர்க்குண்மை வை."

சிவபோகசாரம் 2.

## VI. எறிபத்தநாயனார் புராண தத்துவார்த்தச் சுருக்கம்.

மாதாவின் கருப்பத்தில் உற்பத்தியானமைபற்றிக் கருவூர் அல்லது கருப்பபுரியெனச் சிறப்புப் பெயர்பெற்ற சரீரத்திலே சீவர்களுக்குரிய கேவல சகல சுத்தாவத்தைகளில், சீவர்கள் கருவிகளை நீக்கிய கேவலாவத்தையையும், கருவிகளின் வயப்படாத சுத்தாவத்தையையும் நீக்கிக் கருவிகளோடுகூடிய சாக்கிராவத்தைக்குரிய ஆனிலை யென்னும் லலாடத் தானத்திலே சீவன் நின்று, சிவத்தைக் காமுற்றதும், சிவத்தால் அநாதி முதலே உபகரிக்கப் பெற்றதுமான சிவகாமி யாண்டாரெனும் சீவனது திண்ணிய அன்புகூர்ந்து, ஞானேந்திரிய

கன்மேந்திரியங்களில் பற்றில்லாததும்,அஹிம்சாதி எண்வகைகளான ஞானமயமாகின்ற அட்டபுட்பங்களைத் தன்னிடத்தே கொண்டதும், கிரந்திகளையுடைய வீணாதண்டினூடே வரும் சுழிமுனைநாடியை ஆதாரமாகக்கொண்டதும், மற்றோர் பற்றில்லாததுமான மனதையுடையதாய்த் தன்னிடத்திற் சேர்ந்த சீவர்களைச் சனனமரணங்களாகிய சம்சாரமார்க்கத்தில் மீள விடாதிருக்கும் சிவலோகமெனப் பெயரிய பசுபதியை, தொடராகத் தொடருதற்குச் சிந்தை தெளியும்படி அன்பாகிய நாரில் மனமாகிய கரத்தால் அஹிம்சாதி புட்பங்களைப் புடையாக வைத்து அஞ்செழுத்தாகிய மலர்களைத் தொடுத்து அன்பிற் பிணிப்புறும் வண்ணம் சிவபிரானுக்குச் சாத்தித் தியானித்தது.

அவ்வாறு தியானிக்கும்போது, இருவினைகளாகிய பாகராற் செலுத்தப்பட்டு, மூன்று மாயைகளாகிய பரிக்காரர்களைச் சூழக்கொண்டு, திரோதான சத்தியாகிய அரசனது ஆணையில் நடக்கும் ஆணவமாகின்ற யானையானது காலகதியினாலே களிமயக்கம் மேலிட்டு, சிவபிரானைத் தியானிக்கும் சீவனது மனதைப் பறித்து (அலைத்து என்றபடி) அதிலுள்ள அருண்மயமான அஹிம்சாதி புட்பங்களைச் சிதறடித்தது.

அதனை யறிந்த சீவனானது ஆணவத்தை அடக்க முயற்சித்தும் ஆணவமானது மேலிட்டுத் தன்வசப்படாது போக, சீவன் தனது செயலின்மையால் தளர்ந்து நின்று, ஆணவத்தின் வலியை அழித்துத் தனக்குச் சுகத்தைக் கொடுக்கும்படிச் சிவபிரானைப் பிரார்த்தித்து இரங்கியது,

அப்போது, ஞானேந்திரிய கன்மேந்திரியங்களைத் துறந்தவரும் அநாதிபற்றாகவுள்ள ஆணவ மாயா கன்மங்களாகிய பற்றுக்களையும் அவை காரணமாக வருகின்ற பொருட்சார்பு உயிர்ச்சார்புகளாகிய பற்றுக்களையும் நீத்தவரும், அதனால் எறிபத்தர் (அல்லது எறிபற்றர்) எனக் காரணப்பெயர் பெற்றவருமாகிய ஞானசாரியர், பாசங்களைச் சேதிக்கும் ஆற்றலுடையதான கர்த்தரியெனும் பெயரோடுகூடிய ஞானசத்தியாகிய வாளையுடையவராய் வந்து, பக்குவத்தில் உதவுந் தன்மையராதலாலே சீவன் இரங்குதலை அறிந்து, தமது கருணையினாலே சீவனின் வலியைக் கடந்த ஆணவத்தைத் தடியும் பொருட்டுத் தாமாகவே சரீரம் கம்பிக்கும்படி யோகநெறியால் மேலிட்டு நித்தமாகிய ஆணவத்தினது மறைக்குஞ் சத்

தியை அறுத்து வினைகளையும் மாயை மாயேயங்களையும் அழித்து, சீவனுடைய துன்பத்தைக் களைந்து நின்றார்.

திரோதான சத்தியானது தனது ஆட்சிக்கு முக்கிய அங்கங்களான ஆணவம் முதலியவைகள் அழிக்கப்பட்டதை அறிந்து, ஆவடுதுறையாகிய சுழிமுனையை அடைந்து, அவ்விடத்தில் ஆணவம் முதலியவைகளை அழித்தவர் சிவபிரானின் வேறாகாத ஞானசாரியரென அறிந்து, அவரைச் சிவபிரானெனவேகண்டு, மலங்களை அழித்ததானது அவருடைய அருட் செயலாகுமெனத் துணிந்து, அவ்வாசாரியரை யணுகி மலங்களின் கொடிய செயல்களுக்குத் தானுங் காரணமாய் இருத்தலால் தன்னையும் அழிக்கும்படிப் பிரார்த்தித்தது.

அப்போது ஞானசாரியர் தமக்கெதிரே தோன்றுவது திரோதான சத்தியென்றறிந்து, தமக்கனன்னியமாயுள்ள சிவபிரானது ஆணையைச் செலுத்துகின்ற திரோதான சத்தியானது வருந்தும்படி நேர்ந்ததைப்பற்றித் தாமும் வருந்தித், தம்மைத் துறக்கக் கருதினார். அவரது நிலையையும் அருட்டிறத்தையும் கண்ட திரோதான சத்தியானது தனதருள் வலியால் ஞானசாரியரைத் தடுத்தது

அச்சமயத்தில் சீவர்களது அன்புத்திறத்தையும் அவர்களை ஆட்கொள்ளும் முறைமையையும் உலகறியச்செய்யவே இவ்வாறு நிகழ்ந்ததென்று திருவருளாலுணரப்பெற்று இருவரும் திருவருளைப் புகழ்ந்தார்கள்.

உடனே சீவனுடைய மனதில் உத்தம தெய்வீகமான அஹிம்சாதி அருண்மய புட்பங்கள் நிறையப் பெற்றதையும், ஆணவம் கன்மம் மாயை மாயேயங்கள், முன்னே தங்களுக்கிருந்த மறைக்குந் தன்மைகெட்டுப் பிரகாச முடையனவாகி, அருண்மயமாய் மாறியதையும், சீவன் அருண்மயமாய்ப் பரவசப்பட்டதையும் அவ்விருவரும் கண்டார்கள்.

இவ்வாறு திரோதான சத்தியும் ஞானசாரியரும் திருவருளாணையென அவைகளைக் கண்டு திருவருளை வாழ்த்திய பின், திரோதான சத்தியாகிய அருட் சத்தியின் பாதத்தில் அடங்கிய ஆணவாதிகளைக் கண்ட ஞானசாரியர், அவ்வருட் சத்தியை நோக்கி ஆணவாதிகளைச் செலுத்தித் தனது அருளாட்சியை நடத்தும்படிப் பிரார்த்திக்க, அருட்சத்தியும் சிவ

பிரானின் வேருகாத ஞானுசாரியரை வணங்கி அவரது ஆணைக்கு அஞ்சி ஆணவத்தைச் செலுத்தித் தனது அருளாட்சியை நடத்தியது.

சிவனுனது சிவபிரான் ஞானுசாரியர் வாயிலாகத் தனக்கு அநுக்கிரகித்த முறைமையைக் கண்டு ஆனந்த பரவசனுய்த் தனது கடமையிற் றவிராது தனது தேகாந்தம் வரையில் தியானபரனு யிருந்தே சீவன் முத்தனுய் விளங்கியது.

ஞானுசாரியரும் இவ்வாறே சிவனடித் தொண்டை விரும்பிய பக்குவான்மாக்களுக்கு அநுக்கிரகித்துக்கொண்டிருந்து சிவாக்கினையினுலே சிவதாகமுள்ள சீவர்களுக்குத் தலைவராய் விளங்கிக்கொண்டிருந்தார்.

மொழிவழி யொழுகு மன்பர் முன்புறு கருப்பை யுந்திச்
சுழிவழி யிழியா வண்ணந் துணைப்பத மிதவை நல்கி
விழிவழி யருளி னேற்று மெய்கண்ட் சந்தா னத்து
வழிவழி வருவோர் காமர் சேவடி வணங்கி வாழ்வாம்

—கருவூர்ப்புராணம் பாயிரம் 18.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

எறிபத்தநாயனுர் புராணத்தின் தத்துவார்த்தம் முற்றும்.

## மேற்கோள் நூல்கள் (அகர வரிசை.)

(மேற்கோள் பாடல்கள் இந்நூலில் வந்துள்ள பக்கங்களை எண்கள் குறிக்கின்றன.)


1. ஆத்திசூடி 8.
2. இருபா இருபஃது 12.
3. இறைவனூற்பயன் 14.
4. கந்தபுராணம் 22.
5. ௸ கீர்த்தனை 22.
6. கருவூர்ப்புராணம் 1, 5, 6-8, 15, 17, 19, 20, 35.
7. காமிகாகமம் 13.
8. கோயில்நான்மணிமாலை 8.
9. சத்தியஞான போதம் 12, 20, 21.
10. சித்தாந்தசாராவளி 16.
11. சிவஞானசித்தியார்-சுபக்கம் 13, 14, 20, 30, 31.
12. சிவஞான முனிவர் துதி 24.
13. சிவப்பிரகாசம் 7, 15, 23.
14. சிவபோகசாரம் 32.
15. சுந்திரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் 1.
16. ஞானாமிருதம் 17, 18.
17. தத்துவப்பிரகாசம் 14.
18. தாயுமானார் பாடல் 6, 21.
19. திருக்குறள் 8, 9.
20. திருஞானசம்பந்தர் தேவாரம் 12.
21. திருத்தொண்டர் திருவந்தாதி 1,
22. ௸ புராணசாரம் 1.
23. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் 6, 8, 9.
24. திருப்பெருந்துறைப் புராணம் 11, 31.
25. திருமந்திரம் 8.
26. திருவருட்பயன் 7.
27. திருவாசகம் 15.
28. திருவிடைமருதூர் மும்மணிக் கோவை 21.
29. திருவிளையாடற் புராணம் 17.
30. துகளறு போதம் 20.
31. துறையறிவிளக்கம் 24.
32. பண்டாரமும்மணிக்கோவை 7.
33. பதிபசுபாச விளக்கம் 7.
34. பிராசாத அகவல் 10.
35. பெரிய புராணம் 1, 6, 8, 10, 12-15, 17-30, 32, 35.
36. பெரிய புராணக் கீர்த்தனை 16-18 28, 29.
37. போற்றிப்பஃறொடை 6.
38 மத்தியந்தனசாகை 7.
39. மைத்ராயணோபநிடதம் 7.
40. வாயு சங்கிதை 13.
41. வில்லிபுத்தூரர் பாரதம் 9.
42. வைராக்கிய சதகம் 6.
43. பெயர் தெரியாதன 22.

Q23wxl:9
N51

# வேண்டுகோள்.

சைவ மெய்யன்பர்களே, வணக்கம். சமயப்பற்று குறைந்துகொண்டேவரும் இந்நாட்களில் இத்தகைய மெய்ஞ் ஞானப் புதுநூல்கள் வாங்குவாரற்றுப் போவதால் நூலாசிரியர்களுக்கும் வெளியிடுவோருக்கும் ஆதரவில்லை. எனினும் சிவஞானத்தைப் பரப்பி பெரும் புண்ணியமும் புகழும் அரும் பயனும் அடைய விரும்பும் தாங்கள் இந்நூலாசிரியர் இயற்றியுள்ள, பயன்மிகு நூல்களைப் பரப்பி பலரைப் பயிலச் செய்வதுடன் அவர் இயற்றி வெளிவராதிருக்கின்ற அரிய பெரிய நூல்களையும் அச்சிட்டுதவ அன்புடன் அழைக்கின்றோம்.

இந்நூலாசிரியர் பல்லாண்டு அரும்பாடுபட்டு ஆயிரக் கணக்கான நூல்களைத் துருவித்துருவி ஆராய்ந்து "சைவ விளக்கத்திற்கு இந்நூலே போதும்" என்று யாவரும் சொல்லும்படி இயற்றியுள்ள **"சித்தாந்தப்பட விளக்க விருத்தி"** எனும் பெரிய நூலை வெளிவரும்படி செய்யப் பேரருள் புரியுமாறு தங்களைக் கேட்டுக்கொள்ளுகின்றோம். இந்நூல் 16 பகுதிகளை உடையது; ஒவ்வொரு பகுதியிலும் நூற்றுக் கணக்கான மேற்கோள்களைத் தக்க விளக்கங்களுடன் காணலாம். ஒவ்வொரு பகுதியையும் தங்கள், அல்லது தங்கள் உற்றார், உறவினர், பெயரால் வெளியிட்டுதவ வேண்டுகின்றோம். அத்துடன் தக்க அன்பர்களை ஊக்கப்படுத்தி இயன்ற தொகையையும் உதவி அதற்கான புத்தகங்களையாவது பெற்றுத் தக்கார்களுக்கு அளித்து ஆக்கந் தேட முன்வருமாறு வேண்டிக்கொள்ளும் அன்பர்கள்.

**P. T. S. குமரசாமி செட்டியார்.**
**சாமி. வேலாயுதம் பிள்ளை.**

113901

## இந்நூலாசிரியர் இயற்றியுள்ள வேறு நூல்கள், படங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | சித்தாந்தப் படம், பெரிது 28'' × 20'' | 4--0—0 |
| 2. | பிராசாதப் படம் | 1—4—0 |
| 3. | சித்தாந்தப் படம், சிறிது 16'' × 12'' | 1—8—0 |
| 4. | ,, பட விளக்கப் பாலபோதம் | 1—0—0 |
| | ஷை (3), (4)ம் சேர்த்து | 2—4—0 |
| 5. | குண்டவிதி (பல படங்களுடன்) | 1—8—0 |
| 6. | சிவஞானபோதச் சுருக்கம் (காலிகோ) | 1—0—0 |
| 7. | சிவாலயமும் கும்பாபிடேகமும் | 0—4—0 |
| 8. | சிவனடியார் திருக்கூட்டம் | 0—3—0 |
| 9. | சித்தாந்தப்பட விளக்கம் | (மறு பதிப்பாகவேண்டியது.) |
| 10. | சைவ அநுட்டான விதி | ,, ,, |

## இந்நூலாசிரியர் வெளியிட்டுள்ளவை.

| | | |
|---|---|---|
| 11. | அருச்சனைப்பத்து (சமய குரவர் 4, சந்தான குரவர் 4, நம்பியாண்டார் நம்பி 1, சேக்கிழார் 1) | 0—6—0 |
| 12. | விநாயகர் அகவல், அநுபூதி, அலங்காரம் | 0—4—0 |

*குறிப்பு:—இவரிடம் வேறு வெளியிடத்தக்க சைவ நூல்களும் சில உள.*

---

இந்நூல் கிடைக்குமிடங்கள்:—

1. சைவ மெய்த்திரு சச்சிதானந்த சுவாமிகள்
சித்தாந்த நிலையம்,
குறடாச்சேரி
Koradachery P. O., Tanjore Dt.

2. திரு P. T. S. குமரசாமி செட்டியார் அவர்கள்,
தலைவர், சிவனடியார் திருக்கூட்டம்,
10, செட்டிப் புதுத்தெரு, கும்பகோணம்.
KUMBAKONAM.